# புதிய மனிதன், புதிய மனுஷி, புது வாழ்வு கருத்தரங்கு

# வல்லமை அளித்தல்

## அகில உலக ஊழியம்

## புதிய மனிதன், புதிய மனுஷி, புது வாழ்வு கருத்தரங்கு

### திருமணம், குடும்பம் மற்றும் பாலினம் பற்றிய வேதபாடங்கள்

தேவனுடன் மனிதனுக்குள்ள உறவு பிறருடன் உறவு என்பன பற்றி வேதம் மூன்று பகுதிகளை நமக்குக் கொடுக்கிறது . "முன்னொரு காலத்தில்" தேவ சாயலாக மனித இனத்தில் ஆணும் பெண்ணுமாக ஒரே அம்சமாக நிர்வாணிகளாக, கணவன் மனைவியாக படைப்பின் சிகரமாக படைக்கப்பட்டனர். இரண்டாம் பகுதியாக மனிதன் விசுவாச வாழ்கையைத் தள்ளிவிட்டதையும் கர்த்தர் மனிதனுக்கு அருளிய செல்வச் செழிப்பை இழந்தது பற்றியும் கூறப்படுகிறது. கிருபையின் இந்த நிலையில் இருந்து ஏற்பட்ட வீழ்ச்சி படைப்பிற்குள் பிளவையும், ஒருவர் மேல் ஒருவர் ஆதிக்கம் செலுத்துதலையும், நாம் படைக்கப்பட்ட நோக்கமாகிய பயமறியாத அன்பை இழத்தலையும் கொண்டு வந்தது. இதன் கடைசிப் பகுதியில், இழந்து போய் அடிமைத்தனத்தில் சிக்குண்டு உலகில் மூழ்கிப்போன நிலையில் இருந்து நாம் மீட்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறோம்.

புதிய மனிதன், புதிய மனுஷி மற்றும் புது வாழ்வு கருத்தரங்கு இந்த மீட்பு நம்மை கர்த்தருடன் நிறைவான உறவைப் பெற்றவர்களாக ஆக்குவதுடன் படைப்பின் உன்னத நோக்கமான ஒருவருக்கொருவர் ஒற்றுமை சமத்துவத்துடன் வாழும் நிலைக்கு நம்மைக் கொண்டு வருகிறது. இந்த மீட்பின் வழியாக நாம் புது மனிதன் மனுஷியாக கிறிஸ்துவுக்குள் புது வாழ்வு பெற்றவராகிறோம்.

<u>பங்குபெறுவோர்:</u> கிறிஸ்துவ விசுவாசிகள், போதகர்கள், தலைவர்கள் சமுக ஊழியர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள், ஒரு கருத்தரங்கில் 30 முதல் 40 பேர் பங்கு பெறலாம். ஆண், பெண் இருபாலரும் சம அளவில் பங்கு பெற ஊக்குவிக்கப்படவேண்டும். அனால் அவர்கள் திருமணமான தம்பதிகளாக இருக்க வேண்டுவதில்லை. பங்கு பெறுவோர் வாசிக்கும் திறமை பெற்றிருத்தல் அவசியம்.

நோக்கம்:

- திருமணம், குடும்ப வாழ்க்கை பற்றி கர்த்தர் வைத்துள்ள இலட்சியத்தை பங்காளர் தெரிந்து கொள்ள வேண்டும்.
- இன்றைய வாழ்க்கை நிலையில், உள்ளபடி திருமணம், குடும்ப வாழ்க்கை ஆகியவற்றிற்கு வரும் சவால்களைப் பற்றிய மற்ற தலைவர்களுடன் கலந்து உரையாட வாய்ப்பை வழங்குதல்.
- பங்காளர்கள் தாமே வேதாகமம் முன் வைத்துள்ள இலட்சியங்களை கற்பிக்கும் ஆற்றல் பெற்றவர்களாக ஆக்குதல்.
- ஆண்கள் பெண்கள் குழந்தைகள் மற்றும் திருமணம் ஆகியவை பற்றிய அறிவில் மேம்படுதல்.

## கருத்தரங்கு இருக்க வேண்டிய அமைப்பு

கருத்தரங்கு 2 அல்லது 3 நாட்கள் நடத்தப்படலாம் (நேரம் இருப்பதைப் பொருத்தது). இக்கருத்தரங்கில் பெரும்பான்மை நேரம் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து ஆண் பெண் பற்றிய வேதப்பாடங்களைக் கற்பதற்காகச் செலவிடப்படும்.

## வசதிகள் தேவையான சாதனங்கள்:

- ஒரு மொழி பெயர்ப்பாளர்.
- பங்குபெறுவோர் உட்காருவதற்க்கும் தேவைப்படும் போது சிறு குழுக்களாக உட்க்கார்ந்து இடையூறின்றிப் பேசுவதற்கும் இருக்கும்படி வசதியான பெரிய அரங்காக இருத்தல் வேண்டும்.
- கருத்தரங்கில் கூறப்படும் கருத்துக்களை காண்பிக்கத் தேவையான பலகை, எழுதுவதற்காக வெள்ளைத்தாள் நோட்டு.
- பங்குபெறுவோர் எழுதிக்கொள்ள பேனா, ஒரு எழுதும் அட்டை தரப்பட வேண்டும்.
- முழுநேரக் கருத்தரங்கு, காலை, மாலை தேநீர் மற்றும் மதிய உணவு ஆகியவற்றிற்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.
- ஒலி பெருக்கி போன்ற சாதனங்கள் அவசியமில்லை.

## பங்குபெறுவோர்க்கு கொடுக்கப்பட வேண்டியவை:

வேதாகமபடிப்பு வழிக்காட்டி மற்றும் கருத்தரங்கு இறுதியில் பங்கு பெறுவோர்க்குக் கொடுக்க சான்றிதழ்கள்.

## கருத்தரங்கு நிகழ்ச்சி நிரல் அறிமுகமும் வரவேற்பும்

- அமைப்பாளர் பங்குபெருவோரை வரவேற்றல்.
- 5 அல்லது 6 பேர் அடங்கிய சிறு குழுக்களாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொண்டு தமக்கு அள்ளிக்கபட்ட வினாக்களுக்கு விடையளித்தல்.
- மீண்டும் ஒன்று சேர்த்தல், ஒவ்வொரு குழுவும் தமது வினா விடைச் சுருக்கத்தைப் பொதுக் கூட்டத்தில் சமர்பித்தல்.
- ஒழுங்கு செய்யும் பொறுப்பாளர் அவற்றை தாம் முன்வைத்த காரியங்களுடன் சேர்த்து தொகுத்துக் கூறுதல்.

கற்றல் விவரங்கள்

- சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து செல்லுதல், ஒவ்வொரு குழுவும் சிந்திக்கக் தலைப்பு கொடுத்தல், ஒரு மணி நேர கால அளவு தருதல்.
- மீண்டும் கூடி பொறுப்பாளர் தொகுத்துக் கருத்துத் தெரிவித்தல்.
- முதற்குழு தாம் ஆலோசனையின் போது வேத பாகத்தில் தாம் கண்ட ஆச்சரியமான குறிப்புகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல்.
- இரண்டாம் முறை கூடி பொருளாராய்ந்தபின் பொறுப்பாளர் தொகுத்துக் கூறுவார். இம்முறை இரண்டாவது குழு பொறுப்பேற்று நடத்தும்.
- இவ்வாறே அனைத்து குழுக்களும் தாம் கண்டறிந்தவற்றை பொதுவான வகுப்பில் கூறி முடிக்கும் வரை நடத்துதல்.

## முதற்தொகுப்பு (முதல் நாள்)

3 குழுவினர்களுக்கும் கீழ்க்கண்ட தலைப்புகளில் ஒன்றை படைப்பின் உன்னத நோக்கம் மற்றும் வீழ்ச்சி ஒதுக்குதல்

பாடம் 1 : ஆதியில் ஆணும் பெண்ணும்

பாடம் 2 : உன்னத உறவு நிலை.

பாடம் 3 : வீழ்ச்சிக்குப் பின் கடவுளுடன் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவின் நிலை

பாடம் 4 : ஒற்றுமையின் சீர்குலைவு

## இரண்டாம் தொகுப்பு (இரண்டாம் நாள்)

5 குழுக்கள் ஒவ்வொருவரும் இயேசுவின் போதனை பற்றிய தலைப்புகளில் ஒன்றை கொடுத்தல்

பாடம் 5: சாபத்தில் இருந்து மீட்பு (இரட்சிக்கப்படுதல்)

பாடம் 6: கண்ணியம் கோத்திரத்தலைவன் ஆதிக்கம்

பாடம் 7: தலைவனாக இருத்தலின் பொருள் என்ன?

பாடம் 8: பெண்களுக்கு கிறிஸ்து தரும் சுதந்திரம்

பாடம் 9: “பெரும்பாடுள்ள” பெண்ணும் இயேசுவும்

## தொகுப்பு மூன்று (இரண்டாம் / மூன்றாம் நாள்)

நான்கு குழுக்கள் அவர்களுக்கு பரிசுத்த பவுல் கூறும் உபதேசம் பற்றிய தலைப்புகளில் ஒன்று தருதல்

பாடம் 10: பவுலும், குடும்பத்தில் அதிகாரமும்

பாடம் 11: பவுல் அப்போஸ்தலனும் “தலைமை” பற்றிய காரியமும்

பாடம் 12: அடங்கிப்போதல்

பாடம் 13: திருமண உறவு என்பது ஓர் இரகசியம்

## உரையாடல்களின் சுருக்கமும், தொகுப்பும்

பொறுப்பாளர், குழுக்களின் உரையாடல், கருத்துக்கள் ஆகியவற்றுக்கு வேதம் கூறுவது யாது என்று தொகுத்துக் கூறுவார் முடிவில் பொறுப்பாளர் பங்கு பெறுவோர்க்கு சான்றிதழ்கள் வழங்குதல்.

## புதிய மனிதன், புதிய மனுசி, புது வாழ்வு

வேதாகமம், மனிதனுக்கும் தேவனுக்கும், மனிதருள் ஒருவருக்கொருவர் உறவு இவற்றை, மூன்று பாகமாக விளக்குகிறது. கர்த்தரின் உன்னத நோக்கத்தின் படியே மனிதன் ஆணும் பெண்ணுமாக கடவுளின் சாயலில் இருவரும் ஒரேமாம்சமாகவும் நிர்வாணிகளாகவும், வெட்கமறிய திருமணம் என்ற நிலையில் படைக்கப்பட்டனர். அது படைப்புகளின் சிகரம், கதையின்

இரண்டாம் பாகத்தில் மனிதன் விசுவாசத்தை புறகணித்ததையும் கர்த்தர் நமக்காக உண்டாகின அபரிதமான வசதிகளை இழந்ததையும் கூறுகிறது. இப்படிக் கிருபையில் இருந்து ஏற்பட்ட வீழ்ச்சியானது பல படைப்புகளுக்குள் பிரிவையும், ஒன்றின் மேல் ஒன்று ஆதிக்கம் செலுத்துதலையும், கர்த்தர் நம்மை படைத்த நோக்கமாகிய பயமறியா அன்பை இழத்தலையும் உண்டாக்கியது. இதன் கடைசி பாகமானது நாம் மீட்கப்பட்ட நிலை பெற்றதையும், கிறிஸ்துவினால் இழந்து போன நிலையில் இருந்து மீட்பு பெற்றதையும் குறிக்கிறது.

இந்த வழிக்காட்டி குறிப்பு அந்த வரலாற்றை ஆராய்கிறது. நமது மீட்பு என்பது, நம் ஒவ்வொருவரையும் கர்த்தருடன் நிறைவான நிலைக்குக் கொண்டு வருவதுடன், படைப்பின் உன்னத நோக்கமாகிய ஒருவருடன் ஒருவருடன் ஒருவர் சமநிலை மற்றும் ஒற்றுமையுடன் வாழவும் வழிவகுகிறது. இதன் வழியாக நாம் புதிய மனிதன், புதிய மனுஷியாக புது வாழ்வு அடைகிறோம்.

# பொருளடக்கம்


பாடம் 1 : ஆதியில் ஆணும் பெண்ணும்

பாடம் 2 : இலட்சிய உறவு...

பாடம் 3 : ஆண் பெண் இவர்கள் கடவுளிடம் கொண்ட உறவு நிலை

பாடம் 4 : ஒற்றுமையின் முடிவு...

பாடம் 5 : சாபத்தில் இருந்து மீட்பு...

பாடம் 6 : கண்ணியம், வம்சாவழி, ஆதிக்க உணர்வு...

பாடம் 7 : தலைவனாக இருத்தலின் பொருள் என்ன?

பாடம் 8 : பெண்களுக்கு கிறிஸ்து அளிக்கும் சுதந்திரம்

பாடம் 9 : பெண்கள் போகப் பொருளாக நடத்துவது பற்றி இயேசு கூறுவது

பாடம் 10 : குடும்பத்தில் தலைமையும் பவுலும்

பாடம் 11 : பவுல் அப்போஸ்தலனும் தலைமைத்துவமும்

பாடம் 12 : கீழ்ப்படிதல்

பாடம் 13 : திருமண உறவின் இரகசியம்

ஆய்வுக்கு உதவின பிற நூல்கள்...

# பாடம் 1 ஆதியில் ஆணும் பெண்ணும்

## மத்தேயு 19:3-8

“அப்பொழுது பரிசேயர் அவரைச் சோதிக்க வேண்டுமென்று அவரிடத்தில் வந்து; புருசனாவன் தன் மனைவியை எந்த முகாந்திரத்தினாலும் தள்ளிவிடுகிறது நியாயமா என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத் தமாக ; ஆதியிலே மனுசரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும் இதினிமித்தம் புருசனாவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன மனைவியோட இசைந்திருப்பான் ; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் ; ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்”.

“அதற்கு அவர்கள்: அப்படியானால் தள்ளுதல் சீட்டைக் கொடுத்து, அவளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதய கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார் ; ஆதிமூலமாய் அப்படி இருக்கவில்லை”.

1. இலட்சியமான திருமண உறவு என்று இயேசு எதைக் கூறுகிறார்?

2. “ஒரே மாம்சம்” என்ற அந்த இலட்சியத்தின்படி நாம் எல்லோரும் ஏன் வாழக்

   கூடாது?

3. இருதயக்கடினம்” என்பதற்கு சில உதாரணங்கள் தருக.

கடவுளின் இலட்சியம் மனிதர்களுடைய பாரம்பரியத்திலோ சட்டதிட்டங்களிலோ காணப்படுவதில்லை ஆனால் “ஆதியிலே” நியமிக்கப்பட்ட நியமத்தின்படி தான் இருக்கிறது. பிராமாணங்கள் ஆதி நியமத்திற்கு முரண்பட்டு இருக்கிறது என்றார். அவர்களது “இருதயக் கடினத்தினிமித்தம்” மோசே அதை அனுமதித்தார்.

### ஆதியிலே ஆதியாகமம் 1:26-29

26. “பின்பு தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுசனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும் மிருக ஜீவன்களையும்

பூமியனைத்தையும் பூமியின் மேல் ஊரும் சகலபிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.

27. தேவன் தம்முடைய சாயலாக மனுசனை சிருஸ்டித்தார் ; அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணும் அவர்களை சிருஷ்டித்தார்.

28. பின்பு தேவன் அவர்களை நோக்கி, நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவா ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி தேவன் அவர்களை ஆசிர்வதித்தார்.

29. பின்னும் தேவன் : இதோ, பூமியின் மேல் எங்கும் விடை தரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன் அவைகளை உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது.

4. தேவசாயலில் படைக்கப்பட்டது யார்? ஆணா? பெண்ணா?

5. பூமியை சுதந்தரித்து ஆண்டு கொள்ளும்படி ஆசிர்வாதத்தை ஆண் பெண் யாரிடம் கொடுத்தார்?

6. பலுகிப் பெருகி பூமியை நிரப்பும் பொறுப்பு (குழந்தைகளைப் பெற்றேடுக்க) யாரிடம் தரப்பட்டது?

7. ஆண்டு கொள்ளுவதும் பலுகிப் பெருகுவதும் ஆசிர்வாதமாக (கட்டளையாக அல்ல) கொடுக்கப்பட்டது. “சமாதானத்தோடே போ” அல்லது “ஆசிர்வதிக்கப்படுவாயாக” என்று கூறுவது போல

8. ஆண் பெண் இருவருக்கும் இதைதவிர வேறு எவற்றைத் தேவன் கொடுக்கிறார் (29 வசனம்)

9. மனிதர்களுக்கு வழங்கப்பட்ட உறவு பற்றிய கடவுளின் திட்டத்தைக் குறித்து எவற்றை அறிந்திருக்கிறோம்? இந்த வசனங்களில் கடவுள் பெண்ணை ஆணை விட வேறுப்படுத்தி நடத்தி இருக்கிறாரா?

ஆணுக்கு படைக்கப்பட்ட உலகில், எந்த அளவுக்கு உரிமை கொடுத்தாரோ அதில் இம்மியும் குறையாமல் பெண்ணுக்கும் கொடுத்தார் ஆதியில் இருந்து இதுவே கடவுளின் கட்டளை. இவ்வாறு இருப்பதைக் கண்டபின் தான் “அது நல்லது” என்று தான் கூறினார். (ஆதி 2) பெண்ணும் படைக்கப்பட்டு ஆணும் பெண்ணுமாக நின்ற பிறகு தான் அவர்கள் கரத்தில்

படைப்பதனையும் ஆண்டு கொள்ளும்படி அதிகாரத்தை கொடுத்தார். அதன் பின்னர் படைப்பதனையும் மிக நன்றாக இருக்கிறது எனக்கூறி அறிவித்தார்.

## காலாசார மாற்றங்கள் / அவற்றில் இசைவு பெறுதல்

10. இயேசு பரிசேயர்களைப் பார்த்து கடவுளின் படைப்பின் லட்சியம் மனிதர்களின் பரம்பரை பழக்க வழக்கங்களில் இருப்பதில்லை என்று கூறினார். ஆதியாகமம் 1 : 26-29 வசனங்களில் கூறப்பட்ட படைப்பின் லட்சியமும் பழக்க வழக்கங்களும் எவற்றில் முரண்படுகின்றன?

11. இந்த வசனங்கள் உன்னையும் உன் உறவுகளையும் எதிர்பார்ப்புகளையும் பற்றி வேறு வகையில் யோசிக்க இடமளிக்கிறதா?

## பாடம் - 2 லட்சிய உறவு

முதல் பாடத்தில், ஆண் பெண் உறவு என்பது பழக்க வழக்கங்கள் அல்லது மோசேயின் பிரமாணங்களில் காணப்படவில்லை என்று இயேசு கூறுவதை நாம் கற்றோம். மாறாக, மனித குலத்தை எவ்வாறு படைத்தார் என்பதில் தான் அவரது மெய்யான விருப்பம் காணப்படுகிறது. ஆதியாகமம் முதலாம் அதிகாரம் படைப்பின் "விசாலமான சித்திரத்தையும்," 2 ஆம் அதிகாரம் அதே சம்பவங்களின் "விவரமான சித்திரத்தையும்" தருகின்றன. இரண்டாம் அதிகாரத்தில் மனித குலத்தை ஏன் ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் என்று பார்கிறோம்.

எபிரேய இலக்கியங்கள் (பழைய ஏற்பாடு - எபிரேய மொழியில் தான் எழுதப்பட்டது) ஒரு சம்பவத்தை இரண்டுவிதமாகக் கொடுக்கும் ஆதியாகமம் முதலாம் அதிகாரம் படைப்பின் "விசாலமான சித்திரத்தையும்," 2 ஆம் அதிகாரம் அதே சம்பவங்களின் "விவரமான சித்திரத்தையும்" தருகின்றன. இரண்டாம் அதிகாரத்தில் மனித குலத்தை ஏன் ஆணும் பெண்ணுமாகப் படைத்தார் என்று பார்க்கிறோம்.

### பாலின உணர்வு படைக்கப்படுதல் ஆதியாகமம் 2:7 மற்றும் 18:25

7. தேவனாகிய கர்த்தர் மனுசனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவவிசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்றும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி தாம் உருவாக்கின மனுசனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தில் நடுவிலே ஜீவவிருட்சத்தையும் நன்மை தீமை அறியதக்க விருட்சத்தையும் பூமியிலருந்து முனைக்கப் பண்ணினார். தோட்டத்துக்கு தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஒடி அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று. முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பெயர் அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். அவ்விடத்திலேயே பொன் விளையும். அந்த தேசத்துப் பொன் நல்லது. அவ்விடத்திலேயே பிதாலோகம் கோமேதக கல்லும் உண்டு.

13. இரண்டாம் ஆற்றுக்கு கீகோன் என்று பேர், அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும்.

14. மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பேர் அது அசீரியாவுக்கு கிழக்கே ஓடும்; நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர்.

15. தேவனாகிய கர்த்தர் மனுசனை ஏதேன் தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் வைத்தார்.

16. தேவனாகிய கர்த்தர் மனுசனை நோக்கி ; நீ தோட்டதில்லுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

17. ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை புசிக்கும் நாழி சாகவே சாவை என்று கட்டளையிட்டார்.

18. பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாக இருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

19. தேவனாகிய கர்த்தர் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகலவிதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார். அந்தந்த ஜீவஜந்துக்கும் ஆதாம் எந்தெந்தப் பேரிட்டனோ அதுவே அதற்குப் பேராயிற்று.

20. அப்படியே ஆதாம் சகலவித நாட்டு மிருகங்களுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும் சகலவித காட்டு மிருகங்களுக்கும் போரிட்டான். ஆதாமுக்கோ ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை.

21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தை சதையினால் அடித்தார்.

22.தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுசியாக உருவாக்கி அவளை மனுசனிடத்தில் கொண்டு வந்தார்.

23. அப்பொழுது ஆதாம் ; இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள் ; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுசி எனப்படுவாள் என்றான்.

24. இதனிமித்தம் தன தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் ; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

25.ஆதாமும் அவன் மனைவியாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.

# <u>மனுசனுக்கு ஏற்ற ஆணை</u>

“மனுசன்” அல்லது “ஆதாம்” என்று மொழி பெயர்க்கப்பட்ட சொற்கள் எபிரேய மொழியில் மனுசன் என்பதற்கும் நேரான சொல் அல்ல. அது ஒரு குறிப்பிட்ட பெயரையும் (ஆதாம்) குறிக்காது. ஆனால் அந்தச் சொல் ‘ஹ ஆதாம்’ என்பது எபிரேய மொழியில் சிவப்பு மண்ணுக்குக் கொடுக்கப்படும் சொல்லாகும். அதம (Adama) என்ற அந்த சொல் குறிக்கும் சிவப்பு மண்ணில் இருந்து மனுசன் உருவாக்கப்பட்டதால் (வசனம் 17) அவ்வாறு கூறப்பட்டது. சரியானபடி நாம் பார்க்கும்போது ஆதாம் என்ற சொல்லுக்கு மண்ணில் இருந்து படைக்கப்பட்டவன் (“The Earth Creature”) என்பதுவே பொருள்.

1. கர்த்தரின் படைப்பு விவரத்தை நம்முன் வைத்துக்கொண்டு (ஆதி 1) காணும் போது கர்த்தர் படைப்புகளைப் பார்த்து “நல்லது” என்று கூறினார். இதே விவரம் ஆதி 2:18 குறிப்பிடும் போது எவ்வாறு வேறுப் படுகிறது.
2. “ஹ அதாம்” மற்றும் மிருகங்களையும் பூமியின் மண்ணில் இருந்து உருவாக்கினார். இவ்விருபடைப்புகளும் படைப்பில் வேறுபாடு என்ன! (வசனம் 7)
3. மனிதன் தனக்கேற்ற துணையை மிருக ஜீவன்களிடம் இருந்து கண்டுபிடிக்க முடியாது. இதிலிருந்து மனுஷனாகிய (ஹ’ அதாம்) தனக்கு ஏற்ற துணை என்ன குண நலம் பெற்றிருக்க வேண்டும்? பெண் மிருகங்களை ஒத்திராமல், ஆணைப்போல, எவ்விதத்தில் ஒத்திருந்தாள்?

   எபிரேய மொழியில் துணை என்ற சொல்லுக்கு EZER KENEGDO என்ற சொல் கொடுக்கப்படுகிறது. அச்சொல் ஆங்கில மொழியில் மொழி மாற்றம் செய்யும் போடு “உதவியாளர்” அல்லது “துணையாள்” என்று வருகிறது.
4. ஆணுக்கு உதவியாக பெண் இருக்க வேண்டும் என்று கூறும்போது மக்கள் இதை எந்தப் பொருளில் ஏற்றுக் கொள்ளுகிறார்கள்?

   எபிரேய மொழியில் EZER KENEGDO (என்றுள்ள சொல்லை “துணையாள்” என்று மொழி மாற்றம் செய்யும் போது பெண் ஆணுக்கு குறைவுபட்டவள் அடங்கிப் போக வேண்டியவள் என்ற பொருளை உள்ளடக்கி இருக்கிறது. துணையாள் என்று சொல்லும் போது, நாம் செய்ய வேண்டிய வேலையை செய்யும்படி ஏவுதல் கூற செயல்படும் ஆள் என்று அர்த்தமாகிறது. (பாத்திரம் தேய்த்தல், குழி தோண்டல் போன்ற பணிகள்) இத்தகைய வேலை செய்கிறவர்களைக் குறிப்பிட

உள்ள வேறு சொல் an eden ஆனால் துணை என்று கடவுள் குறிப்பிட்ட விரும்புவதற்கு ஏற்ற சொல் இதுவல்ல.

சரியாகக் கூற வேண்டும் எனில் மனிதனுக்கு வேண்டுவது ezer kenegdo என்பது கர்த்தரின் விருப்பம். 'ezer' என்பது ஒரு பெயர்ச் சொல். இந்தச் சொல் பழைய ஏற்பாட்டில் 21 முறை பயன்படுத்தப்படுகிறது. அதன் பொருள் பிறருக்கு உதவிடும் ஒருவன் என்பதாகும் (உ-ம்) ஒருவருக்கு உதவி செய்தல் "துணை நின்றல்" என்ற பொருள். ஆதியாகமம் 2 அதிகாரத்தில் 2 முறை வருகிறது. மற்ற 19 இடங்களில் 16 இடங்களில் தம்மை விட மேலான ஒருவரிடமிருந்து பெறப்படும் உதவி என்ற அர்த்தத்தில் வருகிறது. பெரும்பாலான இடங்களில் உதவி பெறப்படுதல் கடவுளிடமிருந்து என்றும், இல்லையெனில் பிறருக்கு உதவிடும் அரசர் என்ற பொருளிலும் பயன்படுத்தபடுகிறது. எவ்வாறாயினும், அந்தச் சொல் "தரத்தில் குறைந்தவர்" அடங்கிப் போக வேண்டியவர்" என்ற பொருளில் வருகிறதில்லை.

இதை நன்கு விளங்கிக் கொள்ள ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். சங்கீதம் 46:1 வசனம் "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்" என்று காண்கிறோம். இரண்டாவது சொல் kenegdo என்பதன் பொருள் ஒருவருக்கு ஏற்ற அல்லது ஒருவரைப் போல உள்ள என்று பொருள் தருகிறது. எபிரேய மொழியில் அச்சொல்லுக்கு 'முகம் முகமாக' என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது பெண்ணானவர் ஆணைப் போலவே அதே சமநிலையில் இருக்க வேண்டியவள் என்று பொருள் ஆகிறது.

ஆண் பெண் ஆகிய இரண்டு ஜீவிகளும் ஒரே சுபாவம், தன்மையுடையவர்களாயிருக்கவும் சமநிலையில் இருக்க வேண்டியவர்கள் என்பதாகும். மோசே, பெண் படைக்கப்பட்டதை எழுதும் போது ஆண், பெண் இருவரும் சமமானவர்கள் என்று பொருள் கொள்ள வேண்டும் என்பதற்காகவே, மேற்குறித்த சொல்லைப் பயன்படுத்தினார். (பக்கம் 8-9)

கடவுள் ஆதாமின் விலா எலும்பில் இருந்து ஏவாளை படைக்கும் போது அவள் எதெனில் ஒரு மிருகத்தைப் போல அல்லாமல், அவனுக்குச் சமமான அதிகாரமும் பலமும் உடையவளாயிருக்க வேண்டும் என்று படைத்தார். பெண், ஆவிக்குரியபடியும், அறிவுப்பூர்வமாகவும், உணர்வு பூர்வமாகவும் நல்ல பலமுள்ளவளாக

இருந்து ஆணுக்கு உழைப்பின் பாரங்களை சுமக்க உதவி செய்ய வேண்டும் என்று படைத்தார். அவனுக்குச் சமமான பலமாயிருந்தால் தான் அவனுக்கு துணையாக செயல்பட முடியும்.

இந்தப் பங்காளர், ஆணுக்கு சமமாக இருக்க வேண்டும் என்பதற்காவே, ஆணின் மாம்சத்தில் இருந்து அவளை எடுத்தார். கடவுள் ஆதாமுக்கு ஆழ்ந்த உறக்கத்தை கொடுத்து அவனுடைய ஒரு பக்கத்தில் இருந்து (பொதுவான மொழி பெயர்ப்பில் விலா எலும்பு என்று கூறப்படுகிறது) ஒரு பெரிய பாகத்தை எடுத்து, ஒரு சின்ன எலும்பை அல்ல) அதிலிருந்து பெண்ணாக படைத்தார். (வசனம் 21,22)

5. மனிதன் படைக்கப்பட்ட பெண்ணை முதன்முதலில் பார்க்கும் போது என்ன கூறுகிறான்? (வசனம் 23) இப்படி அவன் கூறும் போது வெளிப்படும் மகிழ்ச்சியை நீங்கள் கேட்க முடிகிறதா?
6. இந்த வார்த்தைகளில் இருந்து 'ஏற்ற துணையாக' படைக்கப்பட்டவர் ஒருவனே வீட்டு உதவியாளராக இருக்கத் தகுதியானவள் என்று நினைத்தானா? அல்லது வேறு உயர்ந்த தரமுள்ளவள் என்று நினைத்திருக்கக் கூடுமா?

பரம்பரை கருத்தாளர்கள் ஆதாம், பெண்ணுக்கு பெயர் சூட்டியதையே ஆணின் ஆதிக்கந்தான் என்கிறார்கள் (வசனம் 23) ஆனால் 'பெண்' என்று அழைக்கப்படும் போது ஆடு பெயர் சூட்டுவதற்குச் சமமாகாது. பெண் (ishshah) என்ற சொல் ஆணின் மறுபதிப்பு (-ish) என்று கூறலாம். எனவே பெயரைப் பகிர்ந்து கொள்வது போலவே வேறுபல உடமைகளையும் பகிர்ந்து கொள்கிறார்கள். ஆதாம் இங்கு கூறுவது யாதெனில் "இங்கு (கடைசியில்) என்னைப் போன்ற ஒருவர்" இவர் என்று தான் கூறுகிறார் Fleming பெண் படைக்கப்பட்ட பின்னர்தான், "மண்படைப்பானவன்" மனிதன் என்றழைக்கப்படுகிறான்.

கடவுள் ஒரு படைப்பை எடுத்து அதை இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு பாகமும் மற்ற பாகத்துடன் ஈர்ப்பும் பெற்று மீண்டும் ஒன்றாகவே சேர்ந்திருக்குமாறு படைத்தார். இதைத்தான் நாம் "இலட்சியப் படைப்பு" என்று கூறுகிறோம்.

## கலாச்சார அறைகூவல் / அவற்றை சந்திக்க முனைதல்

7. அருள்திரு அறிவர் டோரிபாக்கம் என்பவர் இவ்வாறு கூறுகிறார். ஆண் படைப்பை நிறைவு செய்ய பெண்ணைப் படைக்கப்படவில்லை. ஆனால் இதனால் கடவுள் தம்மையே நிறைவு செய்து கொள்ளுகிறார் என்கிறார். இந்தக் கருத்தை நீங்கள் எப்படிப் புரிந்து கொள்ளுகீறீர்கள்?

8. பெண்ணை 'துணையாக' அல்லது 'உதவியாளாக' எப்படிப் பரிந்து கொண்டு தேவனின் படைப்புக்கு மகிமையைச் செலுத்துகீர்கள்.

9. இக்காலத்தில் பெரும்பாலவர் பெண்ணை ஆணுக்குச் சமமானவர் என்று கருதுகிறார்களா அல்லது ஆணுக்கு அடுத்த நிலையானவர் என்று கருதுகிறார்களா? உங்கள் கருத்து யாது?

10. "ஆணும் பெண்ணும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதவர்களாக இருந்தார்கள்" (வசனம் 25) நிர்வாணம் என்பது தெரிநிலையானது. வெட்கம் அல்லது வெட்கமில்லாமை என்பது உணர்வுபூர்வமானது அல்லது ஆன்மீக நிலைக்கானது. "நிர்வாணிகளாக இருந்தும் வெட்கப்படாதவர்களாக இருந்தார்கள் என்னும்போது அந்த நிலையை எப்படிப் புரிந்து கொள்வது?

# பாடம் 3 ஆண் பெண் தேவனுக்கும் அவர்களுக்கு உள்ள உறவு நிலை

எங்கள் தேவை அனைத்தையும் பெற்றுள்ள இந்த அழகிய தோட்டத்தை பராமரித்துக் கொள்ளும்படியாக கடவுள் எங்களைப் படைத்தார். ஆதியாகமம் 3 ஆம் அதிகாரம் எவ்வாறு மனிதன் தன சுய விருப்பத்தின்படியே செய்ய முனைந்த காரணத்தினால் நாம் “வருத்ததுடனும்” வேதனையும் பாடுபட வேண்டியதானது. இவ்வாறு வேதனையுடன் கூடிய வேலைகளை நாம் செய்ய வேண்டும் என்பது கடவுளின் விருப்பமல்ல. இந்தப் பாடத்தில், கடவுள் இந்த நாட்களிலும் கூட

<u>**கீழ்ப்படியாமை**</u> ஆதியாகமம் 3:1-13

1. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைக் காட்டிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

2. ஸ்த்ரீ சர்ப்பத்தைப் பார்த்து நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்.

3. ஆனாலும், தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைக் குறித்து தேவன் நீங்கள் சாகாதபடி நீங்கள் அதைப்புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

4. அப்பொழுது ஸ்த்ரீயனவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்ப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருசனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

5. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும் நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பிர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

6. அப்பொழுது ஸ்தீரியனவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இட்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருசனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

7. அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது; அவர்கள் தங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து அத்தியிலைகளைத் வைத்து அரைக் கட்சைகளை உண்டு பண்ணினார்கள்.

8. பகலில் குளிர்ச்சியான வேலையிலே தோட்டத்தில் உலவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள் அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனுடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குளே ஒளித்துக் கொண்டார்கள்.

9. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய் என்றார்?

10. அதற்க்கு அவன் நான் தேவருடைய சத்தத்தை தோட்டத்திலே கேட்டு நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன் என்றான்.

11. அப்பொழுது அவர் நீ நிர்வாணி என்று உனக்கு அறிவித்தவன் யார்? புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.

12. அதற்கு ஆதாம் என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்தீரியனவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தால் நான் புசித்தேன் என்றான்.

13. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஸ்திரியை நோக்கி நீ இப்படி செய்தது என்ன என்றார். ஸ்தீரியனவள் சர்ப்பம் என்னை வஞ்சித்தது நான் புசித்தேன் என்றாள் .

1. சாத்தானும் பெண்ணும் உரையாடும் போது கூட யாரெல்லாம் இருந்தார்கள் (வசனம் 6 ) (குறிப்பு: சாத்தான் ஏவாளுடன் பேசும் போது நீ என்று கூறும் போது பன்மைப் பொருள் தந்து இருவரையும் சேர்த்துக் கொள்ளும். ஒருவரிடமல்ல, பொதுவாக பேசுவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்)

2. பாவத்தில் விழுந்த பின் ஆதி ஆண், பெண் இவர்களுக்குள்ள உறவில் நேரிட்டது யாது? கடவுளுடன் அவர்களுக்குள்ள உறவில் என்ன நிகழ்ந்தது?

## <u>ஆதியாகமம்</u> 3:14-24

14. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, நீ இதைச் செய்தபடியால் சகல நாடு மிருகங்களிலும், சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடு இருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்.

15. உனக்கும் ஸ்த்ரீக்கும் உன் வயதுக்கும் அவள் வயதுக்கும் பகை உண்டாகுவேன் அவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

16. அவர் ஸ்திரீயை நோக்கி நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன். வேதனையோட பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருசனைப் பற்றிருக்கும் அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்.

17-19. பின்பு அவர் ஆதாமை நோக்கி நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விளக்கின விருட்சத்தின் கனியை புசித்த படியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோட அதன் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் வெளியின் பளிர் வகைகளைப் புசிப்பாய் நீ மண்ணாய் இருக்கிறாய் ; மண்ணுக்குத் திரும்புவாய்.

20. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஏனெனில் அவர் பூமியிலுள்ள எல்லோருக்கும் தாயானவள்.

3. ஆதியாகமம் 3:14-19 வசனம் அடிக்கடி சாபம் என்று குறிபிடப்படும். இங்கே கவனமாகப் பார்த்தால் ‘சபிக்கப்படுவாய்’ என்ற சொல் இருமுறை மட்டுமே வருவதைப் பார்க்க முடிகிறது. சபிக்கப்படுதல் என்றால் என்ன? கர்த்தர் பூமியின் மேல்தான்சாபத்தை வைத்தார். ஆண் பெண் இவர்கள் மேலல்ல. அதற்க்கு மாறாக ஆதி 3:14-19 வசனங்களில் அவர்களின் செய்கையின் விளைவாக எதிர்காலத்தில் என்ன நடைப்பெறப் போகிறது என்று தீர்க்க தரிசனமாக கூறினார். இந்த தீய விளைவுகள் அவர்களின் செயல்களின் பலனால் வந்தது.

4. இந்த சாபத்திற்கான வசனத்தை அதில் கூறப்பட்ட சாபம், தீர்க்க தரிசனம் இவற்றைப் புரிந்து கொள்ள ஓர் உதாரணம், ஒரு குழந்தை தீயைத் தொட கையை நீட்டுகிறது. அதனைக் கண்ட தகப்பன் “நீ தீயைத் தொடதே அது உன்னைச் சுட்டுவிடும் என்று கூறுகிறார் அதையும்மீறித் தொடுகிறது. தீ சுட்டு விடுகிறது. இதை தகப்பன் கொடுத்த சாபத்தில் குழந்தை வேதனைப்படுகிறது என்று எடுத்துக் கொள்ள முடியுமா?

வேதத்தில் வேறு இடங்களில் நாம் வாசிக்கும் போது தனிநபர் அல்லது கூட்டம் பாதிக்கப்படலாம் எனக்காண முடிகிறது. கவனமாக இந்தப்பகுதியை வாசித்தால் கர்த்தர் இந்த சாபத்தை மந்திகளும் முழுமைக்கும் பெண்ணினம் அனைத்துக்கும் வைத்தார் என்று கூற முடியவில்லை.

5. கடவுளை விட்டு விலகிவிட்டதால் ஆணும் பெண்ணும் அனுபவிக்கப் போகும்பாடுகளைக் கர்த்தர் கூறுகிறார். நம்மை முற்றிலுமாக அவர் விலக்கிப் போடவில்லை என்று உறுதியளிக்கிறார். வசனம் 3:15 வசனத்தில் நமக்குக் கொடுத்த நம்பிக்கையை விவரமாக யோசியுங்கள்.

## கலாச்சார சவால்கள் மற்றும் அதற்கு இணைத்தல்

6. கர்த்தர் ஆணையும் பெண்ணையும் சபித்துவிட்டார் என்று பெரும்பாலானவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. ஆதியாகமம் 3:16-19 வசனங்களை நீங்கள் வாசிக்கும் போது அதை சுலபமாகப் புரிந்து கொள்ளாமல் தீர்க்கதரிசனமாக கொள்ளும்போது ஆண் பெண்ணுக்கு கர்த்தருடன் உள்ள உறவு நிலையை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்?

7. இந்த சாபம் மனிதர் மேல் அல்லது நிலத்தில் மேல்தான் போடப்பட்டது என்று உணரும் போது அதன் நடைமுறை பாதிப்பு என்னவாக இருக்கும்?

## பாடம் 4. ஒற்றுமை சீர்குலைவாதல்

ஆதியாகமம் 2 ஆம் அதிகாரத்தின் கடைசி பாகம் ஆதிமனிதனையும் அவன் மனைவியைப் பற்றி கூறும் போது அவர்கள் “நிர்வாணிகளாகவும் வெட்கப்படாதவர்களாகவும்” காணப்பட்டார்கள் என்று கூறுகிறது. பாதுகாப்பு மற்றும் வெளியரங்கமாகவும் உள்ள இந்த உறவு கர்த்தர் படைத்த அமைப்பில் காணப்படுகிறது. ஆதியாகமம் 3 ஆம் அதிகாரம், மனிதன் கடவுளை ஒதுக்கிவிடும் போது ஏற்படுவது என்ன என்று கூறுகிறது.

### பாகம் - ஆதியாகமம் 3:1-7 ; 16-24

1. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகலகாட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமாயிருந்தது. அது ஸ்தீரியை நோக்கி ; நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.

2. ஸ்த்ரீ சர்ப்பத்தைப் பார்த்து; நாங்கள் தோட்டத்திலுள்ள நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைப் புசிக்கலாம்.

3. ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம் என்று சொன்னார் என்றாள்.

4. அப்பொழுது சர்ப்பம் நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப்புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

6. அப்பொழுது ஸ்தீரியனவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும் பார்வைக்கும் இன்பமும், புத்தியை தெளிவிக்கிறதற்கு இரட்ச்சிக்கப்படத்தக்க விருட்சமாயிருக்கிறது என்று கண்டு அக் கனியைப் பறித்து புசித்து தன புருசனுக்கும் கொடுத்தாள் அவனும் புசித்தான்.

7. அப்பொழுது அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து தங்களுக்கு அரைக் கச்சைகளை உண்டு பண்ணினார்கள்.

16. அவர் ஸ்தீரியை நோக்கி ; நீ கற்பவதியாயிருக்கும் போது உன் வேதனையைப் பெருகப் பண்ணுவேன். (வேதனை என்பதை வேதனையான வேலை அல்லது பாடான பிரசவ வேதனை) பிள்ளை பெறுவாய் உன் ஆசை உன் புருசனைப் பற்றி இருக்கும் அவன் உன்னை ஆண்டு கொள்வான் என்றார்.

17. பின்பு அவர் ஆதாமை நோக்கி ; நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்து புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின கனியைப் புசித்தபடியினாலே பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும் ; நீ உயிரோடியிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அடங பலனைப் புசிப்பாய் (வருத்தம் - வசனம் 16 இல் உள்ளது போல)

18. அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் வெளியின் பயிர் வகைகளைப் புசிப்பாய்

19. நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குப் திரும்பு மட்டும் உன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிப்பாய்: நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்.

20. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான். ஏனெனில் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

## ஏதேன் தோட்டத்திலிருந்து முட்கள் நிறைந்த உலகிற்கு

முதல் ஆணும் பெண்ணும் படைக்கபட்டபின் அவர்கள் ஒருவருடன் ஒருவர் உள்ள நல்ல உறவிலும் தேவனுடன் உள்ள உறவிலும் பிறசிருஷ்டிகளுடன் உள்ள உறவிலும் மகிழ்நதிருந்தார்கள். அவர்கள் வாழ்ந்த தோட்டத்தில் தேவையான எல்லாம் இருந்தது. பாவம், அவர்களை அந்த தோட்டத்தில் இருந்து முள்ளும் குருக்கும் முளைக்கும் நிலத்திற்குத் தள்ளியது. தோட்டத்தைப் பண்படுத்திப் பாதுகாத்து மகிழ்ந்திருக்கும் நிலை மாறி, தேவைகளும் பயமும் நிறைந்த உலகில் உயிர் வாழ வேண்டி ஏற்பட்டது. அந்த சாபத்தின் விளைவாக இல்லாமையும், பஞ்சமும், ஆளும் நிலை வந்தது. திருமணம் பாலுறவு குழந்தை பெறுதல் ஆகியவை சந்தோசத்தைத் தருவதற்குப் பதிலாக நிர்பந்த வாழ்க்கை என்ற கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இயந்திரயுகம் வருமுன்னர், மனிதன் தன்னையும் குடும்பத்தையும் முதிர்வயதிலும் நோய் வயப்பட்ட காலங்களிலும் காப்பாற்ற தனக்கு பல கோல்ந்தைகள் வேண்டும் என்று விரும்பினான். வறுமையான வாழ்வில் பிள்ளை பெருவதுவே பெண்ணின் காரியமானது. இதை ஆதாம் தன் வீழ்ச்சிக்குப் பின் உணர்ந்து தன் மனைவி “ஏவாள்” என்று அழைக்கப்படுவாள். ஏனெனில் ஜீவனுள்ள எல்லாவற்றுக்கும் தாயக இருப்பாள் (வசனம் 20) வீழ்ச்சியுள்ள உலகில், பெண் பிள்ளைப் பேறல்லாது வேறுபல காரியங்களை நடப்பிக்க வேண்டியவளாக கர்த்தரின் தீர்க்கதரிசனதின்படி ஆகிறாள். வேதனையுடன் பிள்ளை பேரவை என்பதைவிட உன் பிள்ளைப் பேரு அதிக வேதனை நிறைந்தாக இருக்கும் என்பது கூடுதல் அர்த்தம் கொடுக்கிறது.

ஆதாமும் ஏவாளும் கடவுளிடமிருந்து விலகி போனதால் வேதனை நிறைந்த உழைப்புச் செய்ய வேண்டியவர்களானார்கள். ஆதாமைப் போலவே ஏவாளும் உழைத்துச் சாப்பிட வேண்டி ஏற்பட்டுவிட்டது.

ஆணைப்போலல்லாது, பெண் பிள்ளைப் பேற்றுடன் வேறு வேலைகளையும் செய்ய வேண்டி நேரிடுகிறது. ஆணின் வேலை அப்படியல்ல பெண் கர்ப் பமாயிருக்கும் போதும் குழந்தைக்கு பாலுட்டும் காலத்திலும் சிலவேலைகள் அவளுக்கு கடினமாகவே இருக்கும். பொதுவாக ஒரு பெண் குழந்தையைக் கவனித்துக் கொள்வத்துடன் ஓரளவு பிற வேலையச் செய்யலாம். தாய்மார்கள் செய்ய முடியாத வேலையை ஆண்கள் செய்வார்கள். ஆணின் வேலை பெண்ணின் வேலை என்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது சூழ்நிலைக்கேற்ப மாறும். உதாரணமாக வீட்டுக்கு அருகில் ஆண் வலைபோட்டு மீன் பிடிப்பான் என்றால், பெண் அவனுடன் இணைந்து மீன் பிடிக்கலாம். ஆனால் கடலில் சென்று மீன் பிடித்தல் ஆண் மட்டுமே அதைச் செய்ய முடியும்.

சாத்திரப்படி பார்த்தால், பலர் சேர்ந்து செய்ய வேண்டிய வேலை ஆணின் வீளை என்றாகி விடுகிறது. வீட்டுக்கு வெளியில் சென்று வேலையைச் செய்யும் ஆண் தான் பெரியவேலையை பொறுப்பெடுத்து முடிக்க முடியும்.

1. உங்கள் பகுதியில் பெண்ணின் வேலை என்று எதைக் கூறுவார்கள் - ஆண்கள் பொதுவாக, எந்த வேலைகளைச் செய்வார்கள்?

## ஆணாதிக்க சமுதாயம்

பெண்ணின் வேலைகள் என்று கூறும் போது வீட்டுக்கு வெளிப்புரமாகச் செய்யப்படும் வேலைகள் அவளைச் சாராது. அதனால் ஆண்கள் சந்தையிலும்

சபையிலும், சந்தையிலும்,சபையிலும், சமூகத்திலும், அரசு வேலைகளிலும் குடும்பத்திலும் செய்யும் வேலைகளினால் பெண்ணை விட அதிகம் செய்வதால் அவன் மேல் ஆதிக்கம் செலுத்துகிறவனாகிறான். பலர் இனணந்து செய்யும் வேலைகளை ஆண் செய்வதால் அவன் பிறர்மேல் ஆதிக்கம் செய்கிறான் அல்லது பிறர் அவன் மேல் ஆதிக்கம் செய்கின்றனர். பொருளாதாரம் பாதிக்கப்படும் நிலையில் மனிதன் உயர்மட்டத்தில் கீழ் மட்டத்தில் காணப்படுவான். விழுந்து போன உலகில் உள்ள இந்த நிலையை ஆணாதிக்க சமுதாயம் என்றழைக்கிறோம். ஆண், பெண்ணின் மேல் ஆதிக்கம்

செய்தல் என்றும் ஆண் பிற ஆண்களின் மேல் ஆதிக்கம் செய்தல் என்றும் அர்த்தம் கொடுக்கும். ஆண், பெண்ணின் மேலும் அல்லது ஆண் பிற ஆண்களின் மேலும் ஆதிக்கம் செலுத்தும் இந்த நிலை மனிதனின் வீழ்ச்சியால் விளைந்ததாகும்.

ஆதியாகமம் 1:28 இல் கர்த்தர் ஆணையும் பெண்ணையும் பலுகிப்பெருகி பூமியை நிரப்பும்படி அவர்களை ஆசிர்வதித்தார். வீழ்ச்சிக்குப் பிறகு கர்த்தர் படைத்த ஒற்றுமை குலைந்து போனது. இலவசமாகக் கிடைத்த அனைத்தும் கிடைப்பது அரிதாகிப் போனது. இன்பமான குழந்தைப் பேரு பெண்ணின் வாழ்கையை மட்டுப்படுத்தியது. பூமியை ஆளுகை செய்த நிலை மாறி தன்னையும் பிறரையும் ஆளுகை என்பது பெரும்பாரமாக மாறியது.

## மனிதனின் வீழ்ச்சி

2. வீழ்ந்து போனதால் மனிதனுக்கு என்ன ஏற்படும் என்று கர்த்தர் கூறுகிறார்(வசனம் 17-19) இன்றைய வாழ்கை முறையில் வீழ்ச்சியால் மனிதன் எவ்வாறெல்லாம் துன்புறுத்துகிறான் என்று உதாரணம் கூறு.
3. உங்கள் சமுதாயத்தில், பதவிக்காவும் அடிகாரத்துக்காகவும் எந்த அளவுக்கு மனிதர்கள் நடந்து கொள்ளுகிறார்கள் - திருமணகளில் திருச்சபை இயக்கத்தில்?

| ஆதியாகமம் 3 | விழுந்து போன உலகின் உண்மை நிலை |
|---|---|
| *மனிதன் கடின உழைப்புக்கு ஆளாகிறான் | கஷ்டப்பட்டு உழைத்து ஜீவிக்க வேண்டும் (உ-ம்) |
| *தான் வியர்வை சிந்தி உழைத்துச் சாப்பிட வேண்டும் | கவலை போட்டிகள் மனஅழுத்தம் பிறரை ஆதிக்கம் செய்தல் (உ-ம்) |
| *மண்ணுக்குத் திரும்புதல் | மரணம் |
| *வேதனையுடன் பெண் பிள்ளை பெறுகிறாள் | *பிள்ளை பெறுவதில் பெண்ணுக்கு சிறப்பு நிலை |

*தமது பெற்றோரை பிள்ளைகள் எல்லாம் ஆதரிப்பார்கள் என்பது

*குடும்பத்தில் தாம் கவனிப்பதற்கு அதிகமாக குழந்தைகள் பெறுவது

*அதிக குழந்தைகள் பெறுவதால் பலதார மணமும், சீதனமும்

*கடின உழைப்புக்கு ஆளாதல்

*தாங்கள் பிழைத்திருக்க பெண்கள் அவசியம் வேலை செய்ய வேண்டும்

*பெண்கள் உழைப்பைக் குறைத்து அதனை குழந்தைகள் குழந்தைகள் உழைப்பின் மூலம் சரிகட்டுதல்

*பெண்கள் தம் கணவனிடம் உதவி தேடல்

*பொருளாதார விசயத்தில் தம் கணவரைச் சார்ந்திருத்தல்

*அதிகாரம் செலுத்தும் கணவனை விரும்பி மணத்தல்

*கணவன் மனைவி மீது ஆதிக்கம் செலுத்தல்

*சமுக நிறுவனங்களில்ஆணாதிக்கம்

*திருமண உறவில் ஆண்களுக்கு கூடுதல் அதிகாரம்

*பெண்கள் ஆண்களிடம் அடிமைப்படுதல்

## பயன்படுத்துதலும், ஏற்படும் சவால்களும்

இந்தப்பாடத்தில் ஆண்கள் ஒருவர் மேல் ஒருவர் அதிகம் செலுத்துதல், பெண்கள் குழந்தைகள் மேல் ஆதிக்கம் செலுத்துதல் ஆதி ஆண் செய்த பாவத்தினால் ஏற்பட்டது படைப்பினால் உண்டானதல்ல. நமது வாழ்கையில் அத்தகைய ஆதிக்க உணர்வு மெலிடும் இடங்களாக கண்டறிந்து அதனை நீக்குதல்.

பின்வரும் பாடங்களில் இயேசுவின் மற்றும் பவுலின் உபதேசங்கள் மூலம் பூமியின் மேல் வந்து சாபம் நீங்கி ஆண் பெண் இருபாலரும் கடவுளுடன் நிறைவான உறவு மீண்டும் பெறுவதை கற்க விருக்கிறோம்.

# <u>பாடம் 5. சாபத்திலிருந்து மீட்பு பெறுதல்</u>

ஆதிமனிதனும் பெண்ணும் தங்களுக்காக கடவுள் வைத்திருந்த திட்டத்தை புறகணித்த போது, அவர்கள் கர்த்தருடன் கொண்டிருந்த உன்னத உறவு சீர்க்கேட்டுப் போயிற்று அதனால் இப்பொழுது நாம் வேதனையுடன் பாடுபட்டுப் பிழைக்க வேண்டியதாயிற்று. திருமணம் என்பது ஐக்கியம் அன்பு இவைகளின்றி நில் மீது போராடும் நிலையாயிற்று. பெண்கள் குழந்தை பேற்றாலும் தம் குழந்தைகளைப் பேணுதலினாலும் கணவனைக் கவனித்துக் கொள்ளுதலினாலும் ஏற்படும் பாரங்களை ஏற்கும் நிலை வந்தது. இப்படி விளைந்த கடின உழைப்பின் காரணமாக பெண் தன் பொருளாதார தேவைக்காகவும், சரீரப்பாதுகாப்புகக்காகவும் தன கணவனை எதிர்பார்க்க வேண்டி வந்தது. ஆணைப் பொறுத்தவரை பிற ஆண்களுடன் போட்டியிட்டு மேற்கொள்ள வேண்டி இருந்தது. இப்படிப்பட்ட காரணங்களால் கர்த்தர் அவர்களை படைத்த உன்னத நோக்கமான “ஒரே மாம்சம், நிர்வாணி ஆனால் வெட்கமறியாத நிலை” ஆகியவற்றை எட்ட முடியவில்லை.

இந்த வேதனையும் கவலைகள் உள்ள நிலையில் இருந்து இயேசுவின் வாழ்க்கையும் உன்னத உபதேசங்களும், நாம் படைக்கப்பட்ட நோக்கத்திற்கு மீண்டும் நம்மை அழைத்துச் செல்லுகிறது.

<u>மத்தேயு 19:16-25</u>

“அப்பொழுது ஒருவன் வந்து அவரை நோக்கி : நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்க்கு அவர் ; நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவரும் இல்லையே ; நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்; அவன் அவரை நோக்கி ; எவைகளை என்று கேட்டான் அதற்கு இயேசு ; கொலை செய்யாதிருப்பாயாக களவு செய்யாதிருப்பாயாக பொய்சாட்சி சொல்லாதிருப்பயாக, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக ; உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பவைகளையே என்றார். அந்த வாலிபன் அவரை நோக்கி ; இவைகளையெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருகிறேன் ; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு இயேசு நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய், உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்தில்

உனக்கு பொக்கிசம் உண்டாயிருக்கும், பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிரருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய் விட்டான். அப்பொழுது இயேசு, தம்முடைய சீடர்களை நோக்கி ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும், ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குக் சொல்லுகிறேன் என்றார். அவருடைய சீடர்கள் அதைக்கேட்டு மிகவும் ஆச்சிரியப்பட்டு அப்படியானால் யார் இரட்சிக்கப்படக் கூடும் என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து மனுசரால் இது கூடாதுதான் தேவனாலே எல்லாம் கூடும் என்றார்".

1. ஒரு பெரிய மனிதனிடம், வாழ்கையில் வெற்றியுள்ளவன் அதாவது உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவரிடம் எத்தகைய நடத்தையை நாம் எதிர்பார்க்க முடியும் (உலகப்பிரகாரமாக)? இதனால் என்ன கவலைகள் பொறுப்புகள் உண்டாகின்றன? பெரிய மனிதர்களுக்கு உண்டாகும் பிரச்சனைகள் என்ன?

2. ஐசுவரியவானைக் குறித்து இயேசு கூறிய வார்த்தைகளால் சீடர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். ஏழைகளை விட பணக்காரர்கள் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க தகுதியுள்ளவர்கள் என்று கிறிஸ்துவர்கள் எந்த அளவுக்கு கருதுகிறார்கள்?

## <u>மத்தேயு 6:25-34</u>

"ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம்" என்று ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரிரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் ; ஆகாரத்தைப் பாரிக்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறது. என்ன? காட்டு புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை. என்றாலும் சாலமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுதினதில்லை என்று உங்களுக்குச்சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் கட்டுப்புல்லுக்கு

தேவன் இவ்விதமாய் உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக அதிசயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை எல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள், இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளையெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால் நாளைகாகக் கவலைப்படாதிருங்கள் . நாளையத் தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்".

3. இந்தப் பகுதி வசனங்களில் இயேசு என்ன காரியங்களை சுட்டிக் காட்டுகிறார்?

4. ஆதியாகமம் 3:17-19 வசனங்களில் கடவுள் ஆதாமுக்கு; கூறிய காரியங்களையும், இயேசு மேற்குறிய காரியங்களுக்கும் உள்ள வேறுபாடுகளைக் கூறு.

உன்னால் பூமி சபிக்கப்பட்டிருக்கும் நீ உயிரோடிருக்க்ம் நாளெல்லாம் வருத்தத்துடன் பாடுப்பட்டு உன் ஆகாரத்தை சாப்பிடுவாய். பூமி உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும். வெளியின் பயிர்கள் உனக்கு உணவாகும் உன் சமுகத்தின் வியர்வையால் அப்பத்தைப் புசிப்பாய் மண்ணில் இருந்து வந்தாய் மண்ணுக்கே திரும்புவாள்.

அனேக இடங்களில் இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்கள் செழிப்பான வாழ்வைப் பெறுவார்கள் என்று கூறியிருக்கிறார். தம்மிடத்தில் திரும்பி வருகிறவர்கள் முள்ளுக்கு பதிலாக புஷ்பங்களைப் போல வாழ்வார்கள்.

இதனால் நாம் உழைக்காமலே செழிப்பான வாழ்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று நினைக்கக்கூடாது.

“மேலும் சகோதரே, எங்களிடத்தில் ஏற்றுக் கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கிற்று நடக்கிற எந்த சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும் என்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். இரவும் பகலும் பிரயாசத்தோடும் வேலை செய்து சாபிட்டோம். நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்க வேண்டும்மென்றே அப்படிச் செய்தோம் ஒருவன் வேலை செய்ய மனதில்லாமல் அவன் சாப்பிடவும் கூடாதென்று... உங்களுக்கும் கட்டளையிட்டோமே.

கடவுள் மனிதனை தோட்டத்தை கவனிக்கவும் பண்படுத்தவும் வேண்டி படைத்தார் (ஆதி 2:15) விழுதல் காரணமாக பூமி சபிக்கப்பட்டது. ஆணும் பெண்ணும் கடின உழைப்புச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. கிறிஸ்துவை நாம் ஏற்றுக் கொண்ட பின் அவர் நம்மை மீட்டு அடிமைத் தனத்திலிருந்து முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருகிறார். விசுவாசத்துடன் இருப் போமென்றால், பயத்துடனும் பேராசையுடனும் இருக்காமல் (ஆதி 3:16-17) ஆதியில் இருந்த நல்ல நிலையான தோட்டத்தை பராமரிக்கும் நிலைக்கு வருவோம். உணவு, உடை, ஆயுள் இவற்றைக் குறித்து கவலைபடாமலும் பயப்படாமலும் இருக்க முடியும்.

5. (குழுவாக இருக்கும் போது ஆளுக்கு ஒரு வசனம் வாசிக்கலாம்) கீழ்க்கண்ட வசங்கள் எந்த விதத்தில் கிறிஸ்து விழுந்து போன நிலையை மாற்றுகிறார் என்று அறிந்து கொள்ள முடியும்.

I கொரி 15:22,26, VELI 7:16,17, வெளி 22: 2-3, II தீமோ 1:10, வெளி 21:3-4

## <u>கற்ற காரியங்களை பயன்படுத்துதல்</u>

6. “பண்படுத்துதல்” பாதுகாத்தல் என்ற சொற்களுக்கும் “வருத்ததுடன் வேலை செய்தல்” என்ற சொல்லுக்கும் வேறுப்பாடுகள் என்ன? உங்கள் சொந்த வாழ்க்கையில் இதற்க்கு ஏதேனும் எடுத்துக்காட்டுகள் உண்டா?

7. இயேசு கூறின இக்காரியங்கள் பரலோக வாழ்கைக்கு மட்டும் தானா? பரலோக ராஜ்யத்தை இவ்வுலக வாழ்கையிலே தான் அனுபவிக்க முடியும் எனில், அது எத்தகைய வாழ்க்கையாக இருக்கும்.

8. கிறிஸ்தவனாக இருந்தால் உழைக்கக் கூடாது என்பது பொருளாகுமா? அல்லது கிருஸ்துவன் ஒருவன் செய்யத் தகுதியில்லாத இழிவான வேலை என்று ஒன்றுண்டா?

9. “வருத்ததுடன் வேலை செய்தல் என்பதை “தோட்டத்தைப் பராமரித்தல்” என்று புரிந்து கொண்டோமேயானால் உங்கள் கணவன்/மனைவி/குழந்தைகள் ஆகியோரை நடத்தும் விதத்தில் எவ்வாறு மாற்றம் காணமுடியும்?

## பாடம் 6 கண்ணியம், குடும்பத் தலைமைத்துவம் ஆதிக்க உணர்வு

ஆணாதிக்கம் என்பது பெண்ணை கீழான நிலையில் வைத்து நடத்துவது என்று கருதப்படுகிறது. புதிய ஏற்பாடு வரலாற்று ஆசிரியரான எஸ். ஸ்காட்பார்ட்கி என்பவர் இதைக் குறித்துக் சொல்லும்போது ஆண் பெண்ணை தன் கீழ் வைத்துக் கொள்வது என்று மட்டுமில்லாமல் சில ஆண்கள் பல ஆண்கள் பெண்கள் எல்லோரையும் தங்களுக்குக் கீழ்ப்படுத் துவது என்று பொருள்படும் என்கிறார். இந்த ஆதிக்க உணர்வு தான் அடிமைத்தனம், பிரபுத்துவமுறை, சர்வதிகாரம் ஆகியவற்றிற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. ஆணாதிக்க சமுதாயத்தில் ஆண்கள் ஆதிக்கம் செய்து அதிகாரம், புகழ், உயர்ந்த பதவிகள் பெற அழைப்பார்கள். ஒருவர் தன் பெருமை அதே சமயத்தில் மற்றவர்களுக்கு இக்கட்டுகள் உண்டாகாமல் பார்த்துக் கொள்வது அவசியம். ஒருவன் நம்மை இழிவு செய்தால் அவன் பழிவாங்கப்பட வேண்டும். தவறினால் குடும்ப கௌரவம் பாதிக்கப்படும் என்று நினைகிறார்கள். தங்களுக்கு தேவையான பொருள்கள் குறைவுபடும்போது மற்றவர்களுடன் போர் இனக்கலவரம் அவநம்பிக்கை வன்முறை ஆகியவைகள் வெளியாகும். இந்த நிலையில் ஆண்கள் தங்கள் ஆண் பெருமையை வெளிப்படுத்த குடிப்பதிலும், பல பெண்களுடன் உறவு கொள்வதிலும் அவர்கள் மூலமாகப் பல குழந்தைகளைப் பெறுவதிலும் இப்படி விகற்பமான செயல்களைச் செய்கிறார்கள். ஒரு மனிதனை இழிவுபடுத்த ஒருவழி அந்தக் குடும்பத்துப் பெண்ணை மானபங்கப்படுத்துதல், இந்த உலக ஆசை விளைவிக்கும் எண்ணம் தங்கள் மகன்கள் எழும்பி தன் தகப்பனுக்கு பதவி பேர் இவற்றை சம்பாதிக்க தூண்டுவது ஆகிய காரியங்களை நிகழ்த்தும்.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில், உலக முழுவதையும் ரோமர்கள் ஆட்சி செய்தனர். ரோமகலாசாரமும், யூத கலாச்சாரமும் ஆணாதிக்க கலாசாரங் களே (பழைய ஏற்பாட்டில் இதற்க்கு கட்டுபாடுகளும் இருந்தன) இயேசு யூத ஜனத்திற்கு போதனை செய்தார்; பவுல், ரோம பட்டணங்களில் வாழ்ந்த மக்களுக்கு நிருபங்கள் எழுதினார்கள்.

### ஆணின் கண்ணியம் மத்தேயு 5:38-41

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப்பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கீறிகள். நான் உங்களுக்குச்சொல்லுகிறேன். தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம். ; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மருகன்னதைத் திருப்பிக் கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்

என்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு, ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வர பலந்தம் பண்ணினால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ.

வன்முறைத் தாக்குதல் வரும் போது தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று இயேசு கூறவில்லை. அவர் ஒரு கன்னத்தில் அறைதல், அநியாமாய் வழக்காடுதல், தன்னுடன் வர பலவந்தம் பண்ணுதல் இவைகளைத் தான் கூறுகிறாரே தவிர நேரடியாக பயமுறுத்துதல் பற்றியல்ல. பொதுவான நடைமுறைப்படி எதிர்த்து நடவடிக்கை எடுக்காவிட்டால் குடும்ப் பெயர் போய்விடும் என்பது. இவ்விதமான காரியங்களுக்குள் நுழையவே வேண்டாம் என்பது தான் கிறிஸ்து கூறுவது. உன்னை ஒருவன் இழிவு செய்தால், அதை அங்கேயே விட்டுவிடு என்று இயேசு கூறுகிறார். ஒரு கிறிஸ்துவன் மற்றவனுடன் வழக்காட முனையும் போதே தன்னைத் தானே தோற்கச் செய்வது போல ; துன்பத்தை ஏற்றுக் கொள்வது தான் நல்லது ; உன்னை ஏமாற்றப்படவும் இடங்கொடுத்து விடலாம் (1 கோரி 6:7)

1. பழிவாங்க முயல்வதன் முடிவு எப்படியாகும்? அதற்கு முடிவு வருமா?

## <u>ஆணாதிக்கம்</u> லூக்கா 9:59-60

"வேறொருவனை அவர் நோக்கி: என்னைப் பின்பற்றிவா என்றார். அதற்கு அவன் ஆண்டவரே முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ண எனக்கு உத்தரவு கொடுக்க வேண்டும் என்றான். அதற்கு இயேசு மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணடும் ; நீ போய் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கி என்றார்.

2. இயேசு அந்த வாலிபனுக்கு என்ன கருத்தைக் கூறுகிறார்? இயேசுவின் கடினமான மறுமொழியைப் பார்க்கும் போது, **பார்ட்கி** என்ற வேத வரலாற்று ஆசிரியர் கருத்துப்படி அந்த வாலிபனின் தந்தை மரிக்கவேயில்லை என்று பொருள் கூறுகிறார். இயேசுவுக்கு கீழ்ப்படிந்து அவருக்கு பணி செய்யும் முன்னர் வீட்டுக்குப் போய் தன் தகப்பனுடைய கடைசி மூச்சுவரை உதவி செய்ய வேண்டும் என்று வாலிபன் கூறுகிறான், அந்த நாட்களில் தகப்பன் தான் குடும்பத்துக்கு அதிகாரி. அவரது உடைமைகளை சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமானால் தந்தைக்கு அவரது கடைசி மூச்சுவரை சேவை செய்ய வேண்டும்.

இந்த ஆதிக்க உணர்வை இயேசு கண்டித்துக் கூறுகிறார். இவ்வுலக காரியங்களை முன் நிறுத்தி பரலோக காரியங்களை பின் தள்ளும் பாரம்பரியத்தைக் கண்டிக்கிறார். அந்த வாலிபன் தன் தகப்பனுக்கு

கடைசிவரை கூட இருந்து சேவை புரிந்து கடைசியில் அவரது சொத்துகளையும் சுதந்தரித்துக் கொள்ள முடியும் என்று எண்ணியிருப்பான். நாம் பிசாசை ஏமாற்ற முடியாது. உலக சட்டதிட்டங்களின்படி வாழ்வோமென்றால் அதே சட்டங்களின்படியே மரிக்கவும் நேரிடும்.

3. இதுதான் அந்தப் பகுதிக்கு சரியான விளக்கமெனில் மரித்தோர் என்று குறிப்பிடப்படுகிறவர்கள் யார்?

## <u>பெருமையும் அதிகாரமும்</u> மாற்கு 10:35-37

“அப்பொழுது செபதேயுவின் குமாராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து ; போதகரே நாங்கள் கேட்டுக் கொள்ளப்போகிறதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோம் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் உமது மகிமையிலே எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்காரும்படி எங்களுக்கு அருள் செய்ய வேண்டும் என்றார்கள்.

4. யாக்கோபும் யோவானும் எந்தக் காரியத்தைக் கேட்கிறார்கள்.

### <u>மாற்கு</u> 10 : 41 - 45

“மற்ற பத்துபேரும் அதைக்கேட்டு யாக்கோபின் மேலும் யோவானின் மேலும் எரிச்சலானார்கள். அப்பொழுது இயேசு அவர்களைக் கிட்டவரச் செய்து புற ஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும் அவர்களில் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது ; உங்களில் எவனாகிலும் பெரியவனாய் இருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு பணிவிடைக்காரனாக இருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால் அவன் எல்லோரும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே மனுசகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்டும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்”.

5. மற்ற பாத்து சீடர்களும் யாக்கோபு, யோவான் மேல் ஏன் கோபப்பட்டார்கள்?

6. இயேசு இவர்களுக்கு மறுமொழியாய் என்ன கூறினார்? ஆசிரியமூட்டும் இயேசுவின் இந்த வார்த்தைகள் அவர் மகிமையான அதிகாரமுள்ளவர் என்ற கருத்தை மாற்றி ‘மனிதகுமாரன்’ என்ற நிலை பெறச் செய்கிறது. தானியேல் 7:13-14 வசனத்தின்படி, இயேசுவிற்கு நூறாண்டுக்கு முன் பூமியை நியாயத் தீர்க்க வருகிறவர் ‘மனுச குமாரனுக்கு ஒத்தவர்’. எல்லா ஜனங்கள் தேசங்கள் மொழிக்காரர்கள் அவரி சேவிக்கும்படி ‘அவருக்கு’ அதிகாரமும் மகிமையும், ராஜ்யமும் கொடுக்கப்படும். இயேசு தன்னை மனுச குமாரன் என்றே அழைத்துக் கொண்டார். இயேசு அந்த அதிகாரத்தை தள்ளிவிட்டு மற்றவருக்கு சேவை செய்வது தான் தான் விரும்புவது என்றும் அதன் நிமித்தம் தன் உயிரையும் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார் (பார்ட்கி 1987)

## <u>இனம் சார்ந்த போட்டிகள்</u> லூக்கா 10:25-39

“அப்பொழுது நியாய சாஸ்த்ரி ஒருவன் எழுந்திருந்து அவரைச் சோதிக்கும்படி ; போதகரே நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் ; நியாயப் பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசித்திருக்கிறது என்ன என்றார்? அவன் பிரதியுத்தமாக ; உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்பு கூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக என்று எழுதியிருக்கிறது என்றான். அவர் அவனை நோக்கி நிதானமாய் உத்தரவு சொன்னாய் அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய் என்றார். அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி ; எனக்குப் பிறன் யார் என்று கேட்டான். இயேசு பிரதியுத்தரமாக ; ஒரு மனுசன் எருசலேமில் இருந்து எரிகோவுக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனைக் காயப்படுத்தி குற்றுயிராய் விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் இந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு பக்கமாய் விலகிப் போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில் அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணையும் திராட்ச ரசமும் வார்த்து காயங்களைப் கட்டி அவனை தன் சுவாகனத்தின் மேல் ஏற்றி சத்திரத்துக்கு கொண்டு போய் அவனைப் பராமரித்தான். மறு நாளிலே தான் புறப்படும் போது இரண்டு பணத்தை எடுத்துக், சத்திரத்தான் கையில் கொடுத்து ; நீ இவனை விசாரித்துக் கொள், அதிகமாய் ஏதாகிலும் இவனுக்காக

செலவழித்தால் நான் திரும்பி வரும் போது அதை உனக்குத் தருவேன் என்றான். இப்படியிருக்க கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்? உனக்கு எப்படித் தோன்றுகிறது என்றார். அதற்க்கு அவன் ; அவனுக்கு இரக்கம் செய்தவனே என்றான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி ; நீயும் போய் அந்தப்படியே செய் என்றார். பின்பு, அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஸ்தீரி அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டால். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தால். அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான்.”.

நல்ல சமாரியன் கதை துவக்கத்தில் அந்த நியாய சாஸ்த்ரி இயேசுவை “சோதிக்கும்படி” எழுந்து நின்றான். நற்செய்திப் பகுதிகளை நாம் வாசிக்கும் போது அநேக இடங்களில் யாரோ ஒருவர் அவரிச் சோதிக்கும்படி வந்ததை பார்கிறோம். மனிதனின் குணம் இப்படி மற்றவர்களை பெட்சின்ல் மடக்கும்படி முயற்சி செய்தல். இந்த இடத்தில இயேசு தன் பேச்சில் வெற்றி பெறுகிறார். அடுத்து அந்த நியாய சாஸ்திரி வேறு ஒரு பொறியை வைக்கிறான்.

7. யூதர்களை சமாரியர்களை விரோதிதார்கள். சாமர்ரியனை முக்கியமான பாத்திரமாக இயேசு என்ன காரியத்தை முன் வைக்கிறார்?

## <u>ஒரு மெய்யான மனிதன்</u> மத்தேயு 5:27-28

“விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு ச்தீரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தான் இருதயத்தில் அவளோடு விபச்சாரஞ் செய்தாயிற்று.

7. ஆண்களில் பெரியவன் என்று காட்டிக் கொள்ள சில ஆண்கள் பல பெண்களுடன் பாலுறவு வைத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்தப் பாலுறவு குறித்து இயேசு கூறிடும் திட்டமான காரியம் என்ன?
8. ஆண்களில் பெரியவன் என்று காட்டிக் கொள்ள சில ஆண்கள் பல பெண்களுடன் பாலுறவு வைத்துக் கொள்வதைப் பார்த்திருகிறோம். ஆனால், இந்தப் பாலுறவு குறித்து இயேசு கூறிடும் திட்டமான காரியம் என்ன?
9. இந்தக் காரியங்களிலெல்லாம் பொதுவாகக் காணப்படும் விசயம் என்ன?

## பயன்படுத்துதலும் எதிர்நோக்கும் சவால்களும்

10. பதவி பெற வேண்டும், ஆதிக்கம் செலுத்த வேண்டும் எம்ன்று எண்ணும் மனிதர்களை மட்டுப்படுத்துவது எவ்வாறு?

11. ஆண்களுக்கு : இந்த வழியில் நீங்கள் சிந்திக்கும்போதும் நடக்கும் போதும் என்ன வகையான அழுத்தங்கள் ஏற்படுகிறது? இதற்க்கு உரிய தீர்வுகள் என்ன?

பெண்களுக்கு : உங்களுக்கு நெருக்கமான ஒருவன் தன் நடக்கையில்
மற்றவர்கள் அதிகாரம் செலுத்து வேண்டும் என்றோ அவர்களைப் பழிவாங்க வேண்டும் என்றோ எப்பொழுதாவது எண்ணியதுண்டா? அதே ஆண்களின் நடக்கை அல்லது எதிர்பார்ப்புகள் மாறும்படியாக அவர்களுக்கு கிறிஸ்துவில் விடுதலை பெற எப்படி செய்ய முடியும்?

12. கிறிஸ்தவர்களாகிய நாம், நமக்கு தீமை செய்கிறவர்களை ஏன் எப்படி மன்னிக்க் வேண்டும்?

# பாடம் 7 மற்றவர்களை ஆளுகிறவன் என்று கூறப்படுகிறவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?

ஆளுகிறவனாக விரும்புகிற ஒருவனை இயேசு ஏன் குறை கூறுகிறார். கிறிஸ்துவில் உண்டான புதிய மனிதனுக்கு பணமோ பாலின உறவில் வரம்பு மீறுதல் மற்றவர்களுக்கு மேலாக இருத்தல் என்ற நிலை வருவதில்லை இயேசுவை ஆண்டவர் என்று கூறும் போது அதன் பொருள் யாது?

**<u>நீ கிறிஸ்துவுக்குள் இருக்கிறாய் ...</u>** மாற்கு 8: 27-33

வழியிலே அவர் தம்முடைய சீடர்களை நோக்கி ; ஜனங்கள் என்னை யாரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் சிலை உம்மை யோவான் s ஸ்நானகன் என்றும், சிலர் எலியா என்றும் வேறு சிலர் தீர்க் கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர் ; நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். பேதுரு பிரதியுத்தரமாக ; நீர் கிறிஸ்து என்றான். அப்பொழுது தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்கு உறுதியாய் கட்டளையிட்டார். அல்லாமலும் மனுசகுமாரன் பலபாடுகள்பட்டு, மூப்பராலும், பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு மூன்று நாளைக்குப் பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார். இந்த வார்த்தையை அவர் தாராளமாகச் சொன்னார். அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்துக் கொண்டு போய் அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான். அவர் திரும்பி தம்முடைய சீடரைப் பார்த்து பேதுருவை நோக்கி ; எனக்குப் பின்னாலே போ சாத்தானே, நீ தேவனக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனுசனுக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய் என்று சொல்லி அவனைக் கடிந்து கொண்டார்.

இயேசு இந்த உலகில் ஜீவித காலத்தில் யூதர்கள் தமக்கு ஒரு மேசியாவைத் தந்து இஸ்ரவேலுக்கு ராஜ்யத்தை மீட்டுத்தருவார் என்று நம்பினார்கள். தாவீது அல்லது சாலமோன் போன்ற நீதியுள்ள ராஜாவை அனுப்பி ரோம் ராஜ்யத்தின் அடிமைத்தனத்தில் இருந்து மீட்பார் என்று எதிர்பார்த்தனர்.

1. இயேசு தான் மேசியா என்று ஒப்புக் கொண்டாலும் அதன்பின் தான் தள்ளப்பட்டுக் கொல்லப்படுவார் என்று கூறினபோது பேதுரு அவரைக் கடிந்து கொண்டது ஏன்? "எனக்குப் பின்னாக போ சாத்தானே" என்று கூறியது அவர் 40 நாட்கள் சோதிக்கப்பட்டபோது பிசாசுக்கு கூறின மறுமொழி போலவே தோன்றுகிறது. மத்தேயு 4; 8-10 வசனத்தில் மறுபடியும் பிசாசு அவரை உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சலக ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து ; நீர் சாஸ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவைகளை எல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு : அப்பலேபோ சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்.
2. இந்த மூன்று சோதனையின் முன் வைக்கப்பட்ட காரியத்திற்க்கும் பேதுருவின் எதிர்பார்ப்புக்கும் என்ன வகையில் தொடர்பு காணப்படுகிறது?

## <u>மாற்கு</u> 8 : 34, 38

"ஆதலால் விபசாரமும் பாவமும் உள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வேட்க்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுசகுமாரனும் தமது பிதாவின் மகிமை பொருந்தினவராய் பரிசுத்த தூதர்களோடு கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்".

3. தம்மைப் பின்பற்றுவோர் அவரைக் குறித்து ஏன் வெட்கப்படுவார்கள் என்று கூறுகிறார்?

   அதிகாரத்தை பயன்படுத்துவதைக் குறித்து பலமுறை இயேசு போதித் ருந்த போதிலும் அதை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இயேசு சிலுவையில் மரித்த பின்னரும் அவரது சீடர்கள் உலகியல் அரசு ஒன்றை நிறுவி அதை ஆளுகை செய்வார் என்றே எண்ணினார்கள்.

## <u>அழுக்கடைந்த பாதங்கள்</u> யோவான் 13: 3-10, 12-17

"தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தார் என்பதையும் தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும் தேவனிடத்திற்க்குப் போகிறதையும் இயேசு அறிந்து, போஜனத்தை விட்டேழுந்து வஸ்திரங்களை கழற்றி வைத்து ஒரு சீலையை எடுத்து அறையிலே கட்டிக் கொண்டு பின்பு பாத்திரத்தில்

தண்ணீர் வார்த்து, சீடருடைய கால்களைக் கழுவவும் துடைக்கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுருவிடத்தில் வந்த போது அவன் அவரி நோக்கி ; ஆண்டவரே நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான். இயேசு அவனுக்கு பிரதியுத்தமாக நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார். பேதுரு அவரை நோக்கி நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தமாக ; நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார். அதற்கு சீமோன் பேதுரு ; என் கால்களை மாத்திரம் அல்லல் என் கைகளையும், என் தலையையும் கூட கழுவ வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி முழுகினவன் தான் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும் மற்றபடி அவன் முழுவதும் சுத் தமாயிருக்கிறான். நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகினும் எல்லோரும் அல்ல என்றார்.

அவர்களுடைய கால்களை அவர் கழுவின பின்பு தம்முடைய வஸ்திரங்களை அவர் தரித்துக் கொண்டு திரும்ப உட்கார்ந்து அவர்களை நோக்கி நான் உங்களுக்குச் செய்ததை அறிந்ததிருக்கீறிர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே நான் அவர் தான் ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்தது போல, நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப் பீர்கள்".

கால்களைக் கழுவுதல் என்பது, மற்ற பாரம்பரிய சுத்திகரிப்புகளைக் காட்டிலும் நேரடியாக தேவைப்படுவது மக்கள் செருப்புகளை அணிவதால் அவர்களுடைய கால்கள் அழுக்கடையும், மக்கள் சாப்பிடும் போது மெத்தைகளில் சாய்ந்து படுத்துக் கொண்டு சாப்பிடுவதால் அவர் கால்கள் வெளியே காணப்படும். வரும் விருந்தினரின் கால்களைக் வேலைக்காரர்கள் கதவண்டையில் இருந்து கழுவுவது விருந்தினரை உபசரிப்பதாகும். கால்களைக் கழுவுதல் கீழ்த்தரமான ஒரு செயல் அதனால் தங்களைச் சார்ந்த யூதர்களை தவிர்த்து, தங்களிடமுள்ள பிற இன அடிமைகளையே இந்தப் பணி செய்யும்படி கூறுகிறார்கள். இடுப்பில் துண்டை கட்டிக் கொள்வது என்பதே அடிமைகள் செய்யும் வேலை (பிளாக் 2011)

4. பேதுரு என் அவ்வாறு கலக்கமடைந்தார்? இயேசு வீட்டு வேலைக்காரன், வேலைக்காரியின் வேலையைச் செய்ய முனைந்த போது பேதுரு என்ன செய்ய வேண்டும், என்று தனக்கு வரும் என்று எண்ணியிருக்கலாம்.

5. பேதுரு இயேசுவிடம் தன் சரீர முழுவதையும் சுத்தம் பண்ணும்படி ஏன் கேட்டான்?

   பார்ட்கி என்பவர் இதனை விளக்கும் போது அந்த காலத்தில் இந்தச் செயலை செய்ய வேண்டும் எனில் தன்னை முற்றிலுமாக மாற்றிக் கொள்ள வேண்டும். பேதுரு இதற்கு ஆவிக்குரிய அர்த்தம் கொடுக்கலாம் அப்படியானால் இது அழுக்கான பணியல்ல ஒரு சடங்கு.

6. வேறு இடங்களில் இயேசு தந்து சொல்லை செயல் வடிவத்தில் காட்டினது குறிப்பிடலாம். கடவுளின் ராஜ்யத்தில், அதிகாரம், கௌரவம் இவைகளுக்கு இடமில்லை.

7. கிறிஸ்தவத்தில் உள்ள தாழ்மை வெறும் அடியாளம் மட்டுமா? அல்லது சோதனைக்குரியதா? இயேசு காட்டிய தாழ்மை பிற்காலத்தில் எல்லாம் தனது மேலாண்மையை நிறுவுவதற்காகவா? எதற்காக?

இயேசுவே கிறிஸ்து என்று முதலில் கூறப்பட்ட அறிக்கையை இரண்டு விதமாகக் காணலாம். முதலாவதாக இயேசுவே ஆண்டவர் என்று கூறுவது. வேறு எவரும் ஆண்டவரும் இல்லை என்று பொருளாகிறது. அதாவது அரசர்க்கரசர் (ஜனாதிபதி, பேராயர்) எல்லாம் நமக்கு ஆண்டவனாக இருக்க முடியாது. தந்தை குடும்பத்திற்க்குத் தலைவனாகவோ கணவன் மனைவிக்கு ஆண்டவனாகவோ இருக்க முடியாது. இயேசு மட்டுமே ஆண்டவர் இது முதல் கருத்து. இரண்டாவதாக இயேசு ஆண்டவர்தான். அதே நேரத்தில் கிறிஸ்தவ சமுதாயத்தில், இயேசுவைப் பொறுத்தமாட்டில், அவர் மட்டுமே ஆண்டவர், வேறு ஒருவருக்கு இடமில்லை. அவர் அப்படி தான் நிலையை ஏற்படுத்திய பின்னர், தான் ஒரு வேலையாள் என்ற நிலைமையில் செயல்படுகிறார். ஆண் பெண் அனைவரையும் அந்த நிலைமைக்கு வரும்படி அழைக்கிறார். ஆண்டவராகத் தாமிருந்து மற்றவர்களுக்கு அதிகாரங்கொடுத்து விழுந்து போனவர்களை தூக்கிவிடவும், ஒப்புரவாக்கிவிடவும், உடல் சுகமாகும் வாய்ப்புகள் உண்டாக்கவும், கிறிஸ்தவர்கள் முதிர்ச்சியும், பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாகிய சமுதாயத்தை மீட்டெடுக்கவும் நடத்துதல். (வெறும் அதிகாரம் செலுத்தி இருப்பதை விட இரண்டாவதாகக் கூறப்பட்ட தலைமை பல வாய்ப்புகளை கொடுக்கிறது - பார்ட்கி 1993)

## செயல்பாட்டில் கொண்டு வருதல்

8. எல்லா அதிகாரமும் தனக்குக் கொடுக்கப்பட்ட தென்று அறிந்த பின்னர், அதிகாரத்தை வெளிப்படுத்தும் முறையில் ஓர் இழிவாகக் கருதப்படும் பணியை
பணியை மேற்கொள்ளுகிறார். பிறர் அதைப் பின்பற்றவும் ஆலோசனை கூறுகிறார். இன்றைய வாழ்கையில் நமக்கு அதிகாரம் செலுத்தும் நிலை வரும்போது இந்த அதிகாரத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? திருச்ச பை குடும்ப வாழ்வில், ஆண் பெண்ணுக்கான உறவில் இந்த அதிகாரம் பயன்படுத்தும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்".

# பாடம் 8 பெண்களுக்கு கிறிஸ்து தரும் சுதந்திரம்

இயேசு வாழ்ந்த காலத்தில் (இன்றும் வளராத நாடுகளில் அந்த நிலை காணப்படுகிறது) பெண்கள் குடும்ப காரியங்களைக் கவனிக்கவும், குழந்தைகள் பெறவும் பெண் என்ற அளவுக்காக மட்டுமே பொருட்டாகக் கருதப்பட்டனர். மனிதனின் வீழ்ச்சியினால் ஏற்பட்ட விளைவுகளில் இருந்து இயேசு நம்மை விடுவிக்கிறார். நமது செயல்கள் எல்லாம் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் பழைய சிந்தனையில் இருந்து வேறு திசைக்குத் திருப்பி வருகிறார்.

## பெண்ணும் குழந்தைப்பேறும் லூக்கா 1: 26-28, 30, 34, 35, 38

"...ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்றும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரில் தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்னும் நாமுள்ள புருசனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான். அந்தக் கன்னிகையின் பேர் மரியாள். அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து கிருபை பெற்றவளே வாழ்க கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்த்ரீகளுக்குள்ளே நீ ஆசிர்வதிக்கப்பட்டவள் என்றான். தேவதூதன் அவளை நோக்கி மரியாளே பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெடரரை, அதற்கு மரியாள் தேவதூ தனை நோக்கி இது எப்படியாகும்? புருசனை அறியேனே என்றாள். தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக ; பரிசுத்த ஆவி உன்மேல் வரும் ; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும் ; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும். அதற்கு மரியாள் இதோ நான் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய் விட்டான்".

## உபாகமம் 22: 20-21

"அந்தப் பெண்ணிடத்தில் கன்னிமை காணப்படவில்லை என்னும் சங்கதி மெய்ப்பட்டதேயானால் அந்தப் பெண்ணை அவள் தகப்பனுடைய வீட்டு வாசலுக்கு முன்பாகக் கொண்டுவந்து, அவர் இஸ்ரவேலில் மதி கெட்ட காரியத்தை செய்து, தான் தகப்பன் வீட்டிலே வேசித்தனம் பண்ணினபடியினாலே அவளுடைய பட்டணத்து மனிதர் அவளைக்

கல்லெறிந்து கொல்லக்கடவர்கள் ; இப்படி தீமையை உன் நடுவிலிருந்து விலக்கக் கடவாய்".

1. யோசேப்பு வழியாக அன்றி, குழந்தை பெறுவதில், மரியாள் எந்த ஆபத்தை ஏற்றுக் கொள்ளுகிறாள்? இந்தக் காரியத்தை ஏற்றுக் கொள்ளும் மரியாள் மூலம் அவளது குணநலனைக் குறித்து என்ன அறிகிறோம்?

## <u>லூக்கா</u> 17: 27-28

"அவர் இவைகளைச் சொல்லுகையில் ஜனக் கூட்டதில் இருந்த ஒரு ஸ்தீரி அவரி நோக்கி ; உம்மைச் சுமந்த கர்ப்பமும், நீர் பாலூண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று சத்தமிட்டுச் சொன்னாள். அதற்கு அவர்; அப்படியானாலும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிரவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார்".

2. இயேசுவின் தாயார் எவ்வகையில் சிறந்தவர் என்று அந்தப் பெண் கூறினாள்?

3. வீழ்ச்சியுள்ள உலகில் பெண்கள் தாங்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை கணக்கில் வைத்தே மதிப்பிடப்பட்டனர். மாறாக இயேசு தனது தாயாரைக் குறித்து குறிபிட்டுச் சொன்னதில் எது முக்கியமானது. கடவுள் பார்வையில் ஒரு பெண்ணுக்கு முக்கியமானது எது என்று இதில் இருந்து அறிய முடிகிறது.

## <u>பெண் ஓர் பணியாளாக</u> லூக்கா 10: 38 - 42

"பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில், அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் என்னும் பேர் கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள். அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தால். அவர் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய் வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து அவரிடத்தில் வந்து ; ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் செல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ; மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக் குறித்துக்

கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள் என்றார்".

4. "ஒரு போதகரின் பாதத்தில் அமர்ந்திருந்து" என்ற தொடருக்கு அவன் அவருக்கு மாணவன் அல்லது சீடன் என்று பொருள். பொதுவாகப் பெண்கள் அப்படிப் பாடம் அமர்ந்து இருக்கும் செயலை செய்வதில்லை. இயேசு இந்தச் செயலை ஏற்றுக் கொள்ளும்போது அவர், பொதுவாகப் பெண்கள் நிலையை ஏற்றுக் கொள்வதாகிறது.

5. விருந்தினரை உபசரிக்கும் மார்தாளின் கஷ்டத்தையும், மரியாள் வேத வசனத்தை கற்கும் செயலைத் தெரிந்து கொண்டதையும் இயேசு ஒப்பிடுகிறார். இயேசுவின் பதில் எப்படி விடுதலை தந்தது?

6. நாம் வாசித்த இரண்டு மரியால்களின் கதைகளில் காணப்படும் பொதுவான காரியம் என்ன? இதிலிருந்து ஆண்கள் பெண்கள் கற்றுக் கொள்வதென்ன?

## பயன்படுத்தும் வகை

7. இந்த இரண்டு சம்பவங்களும் தற்காலப் பெண்களுக்கு என்ன கற்பிக்கிறது? இது சந்ததியில்லாத பெண்களும் பெண் குழந்தைகளையே பெற்றெடுக்கும் தாய்மார்களுக்கும் என்ன காரியங்களை போதிக்கிறது.

8. "கவலைப்படுவது கலங்குவது" என்ற நிலைகளில் இருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்வது? (உலகம் எதிர்பார்க்கும் காரியங்களை முக்கியமான காரியங்களில் நம் கவனத்தைச் செலுத்த வேண்டும்)

9. உங்கள் மனைவிமார்கள் இயேசுவின் பாதத்தின் அருகே அமர்ந்து வசனத்தைக் கேட்க எவ்வாறு நீங்கள் உதவிடலாம்?

## பாடம் 9 பெண்கள் ஓர் போகப் பொருளா? இயேசுவின் கருத்துயாது?

விழுந்துபோன மானிட வர்க்கத்தில், பெண்கள், ஆண்களின் போகப் பொருளாக ஆகிவிட்டனர். எல்லாக் கலாச்சாரங்களிலும், பெண்கள் மேல் ஆண்கள் ஆதிக்கம் செய்வது காணப்படுகிறது. பெண்கள் தங்கள் ஒழுக்கத்தை காத்து நடக்க வேண்டும் என்று ஆண்கள் கட்டுபாடு செய்வது காண முடியும். அதனால் பொதுவாகப் பெண்கள் வெளியே சென்று மற்றவர்களுடன் பழகுவது போன்ற சாதாரணக் காரியங்களையும் கட்டுப்படுத்த முனைகிறார்கள். ஆகவே பெண்களும் ஆண்களுக்கு பெண்கள் மேல் ஏற்படும் பாலுறவு ஈர்ப்பும் தான் எல்லா தீமைகளும் காரணம் என்று பொதுவாக மக்கள் எண்ணுகிறார்கள். ஆண்கள் கொண்டுள்ள மோக இச்சைகளுக்கு பெண்கள் காரணம் என்று அவர்களை குற்றஞ்சாட்டுகிறார்கள். மேலும், பெண்களுடன் தொடர்பு கொள்ளுவது மாசுபட்டது என்று கூறுகிறார்கள்.

இயேசு வாழ்ந்த காலத்தில் இதே எண்ணங்கள் தான் பரவியிருந்தன. ஒரு யூதன் தன் மனைவி பாதையிலே ஒரு ஆணுடன் பேசிக் கொண்டிருந்தாள் என்ற ஒரே காரணத்துக்காக அவரை விவாகரத்து செய்யலாம். இந்த எண்ணங்களினால் பெண்கள் குடும்ப கௌரவத்திற்கு இடையுறானவர்கள் என்று என்ன்னினார்கள். பெண் வழிமாறினால் அது குடும்ப கௌரவத்திற்க்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என்று எண்ணினார்கள்.

இயேசு வேதாகமக் கருத்தை இவ்விசயத்தில் ஏற்றுக் கொண்டார். அனால் பெண்களை ஓரங்கட்டி விட எண்ணியதில்லை. அவர்களுக்கு ஊழியம் செய்தார். மேலும் நற்செய்தி பரப்ப அவர்களையும் பயன்படுத்தினார்.

### "தன்னைத் தொட்டது யார் என்று அவர் அறிந்திருந்தால்"

**லூக்கா 7: 36-39**

பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம் பண்ண வேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் அந்தப் பரிசேயன் வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்து அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன கண்ணீரினால் நனைந்து, தன் தளி மயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ் செய்து பரிமள தைலத்தைப் பூசினாள். அவரை அழைத்த பரிசேயன் அதைக்கண்ட போது, இவர் தீர்க்கதரிசியாய் இருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாள்

என்றும் இப்படிப்பட்டவள் என்றும் அறிந்திருப்பார். இவள் பாவியை இருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்".

1. பரிசேயன் ஏன் குழப்பமடைந்தான்?

## தொடர்ச்சியாக லூக்கா 7 : 40 - 47

"இயேசு அவனை நோக்கி ; சீமானே உனக்கு நான் ஒரு காரியம் சொல்ல வேண்டும் என்றார். போதகரே, சொல்லும் என்றான். அப்பொழுது அவர் ; ஒருவனிடத்தில் இரண்டு பேர் கடன்பட்டு இருந்தார்கள். ஒருவன் ஐநூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிகாசும் கொடுக்க வேண்டியதாயிருந்து. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாத போது, இருவருக்கும் கடனை மன்னித்து விட்டான். இப்படியிருக்க அவர்களில் எவன் அவனிடத்தில் அன்பாக இருப்பான்? அதைச்சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக எவனுக்கு அதிகமாய் மன்னித்து விட்டானோ அவனே அதிக அன்பாய் இருப்பான் என்று நிதானிக்கிறேன் என்றான். அதற்கு சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி ஸ்திரீயினிடமாயத் திரும்பி சீமோனை நோக்கி ; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். நீ என் கால்களுக்கு தண்ணீர் தரவில்லை ; இவளோ கண்ணிரினால் என் கால்களை நனைத்து, தன் தலை மயிரினால் அவைகளைத் துடித்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை. இவளோ, நான் பிரவேசித்து முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ் செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை இவளோ, என் பாதங்களில் பரிமள தைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது. இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே எவனுக்கு கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ அவள் கொஞ்சமாய் அன்பு கூறுவான் என்று சொல்லி ; அவளை நோக்கி ; உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்.

2. தன்னைத் தொட்ட பெண்ணைப் பற்றி இயேசு என்ன நினைத்தார்?
3. அவள் பெண் என்ற நிலைப்பாட்டில் இருந்து தன்னை காத்துக் கொள்ள இயேசு ஏதாவது செய்தாரா?

## கிணற்றருகே இருந்த பெண் யோவான் 4: 7,9

"அப்பொழுது சமாரியா நாட்டானாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி ; தாகத்துக்குதா என்றார். யூதர்கள் சாமரியர்களுடனே சம்பந்தங்கலவாதவர்களானபடியால் சாமரிய ஸ்திரீ அவரை ; நீர் யூதனாயிருக்க, சமாரிய ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்கு தா என்று எப்படிக் கேட்கலாம் என்றால். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ;

நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய் அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். அதற்கு அந்த ஸ்திரீ ; ஆண்டவரே மொண்டு கொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்?". யூதருக்கும் சமாரியருக்குமிடையே ஆழமான விரோதம் இருந்து வந்தது. சமாரிய பெண்கள் சுத்திகரிப்பு முறைமைகளின்படி அசுத்தமானவர்களும் மாசுபடுத்துகிறவர்களுமாக யூதர்கள் கருதினார்கள். (மேசி 1989) மேலும் தண்ணீர் குடிக்கும் பாத்திரத்தைத் தொடுவது என்பது தீட்டுள்ளதாகக் கருதப்பட்டது. இங்கே இயேசு தண்ணீர் வேண்டும் என்று தான் கேட்கிறார் ! அந்தப் பெண் ஆச்சிரியப்பட்டதில் விந்தை ஒன்றுமில்லை.

## <u>தொடர்ச்சியாக</u> - யோவான் 4: 16 -18, 25 -26

"இயேசு அவளை நோக்கி நீ போய் உன் புருசனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார். அதற்க்கு அந்த ஸ்திரீ எனக்குப் புருசன் இல்லை என்றால். இயேசு அவளை நோக்கி எனக்கு புருசன் இல்லையென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில் இந்து புருசர்கள் உனக்கு இருந்தார்கள் இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப்புருசன் அல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார். அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி ஆண்டவரே, நீ தீர்க்கதரிசி என்று காண்கிறேன். எங்கள் பிதாக்கள் இந்த மலையிலே தொழுது கொண்டு வந்தார்கள். நீங்கள் எருசலேமில் இருக்கிற ஸ்தலத்தில் தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்களே என்றாள். அதற்கு இயேசு ஸ்தீரியே நான் சொல்லுகிறதை நம்பு. நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலுமாத்திரமல்ல எங்கும் பிதாவைதொழுது கொள்ளுங் காலம் வருகிறது. நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதை தொழுது கொள்ளுகிறோம். ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது. இந்த ஸ்திரீ அவரை நோக்கி கிறிஸ்து எனப்படும் மேசியா வருகிறார் என்று அறிவேன். அவர் வரும்போது நமக்கு எல்லாவற்றையும் அறிவிப்பார் என்றால். அதற்கு இயேசு உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்.

4. இந்தப் பெண்ணின் பாலுறவுப் பின்னணியை ஒரு யூதன் அறிந்தால் அவளைத் துரத்தியடித்திருப்பான் என்பதை இயேசு அறிவார். அதை இயேசு எடுத்துக்காட்ட விரும்பினார். அவளது இழிவான வாழ்கையை அறிந்தாலும்

இயேசு அவளுடனே உரையாடத் தயங்கினாரோ? எந்த ஒரு முக்கிய காரியத்தை அந்தப் பெண்ணுக்கு வெளிப்படுத்தினார்?

## தொடர்ச்சியாக யோவான் 4 : 27

"அந்தருணத்தில் அவருடைய சீடர்கள் வந்து அவர் ஸ்த்ரீயுடனே பேசுகிறதைப் பற்றி ஆச்சிரியப்பட்டார்கள்" அந்நாளில் நிலவிய பாரம்பரியப்படி ஆண்கள் பெண்களுடன் வெளியரங்கமான முறையில் பேசமாட்டார்கள். தனிப்பட்ட முறையிலும், அதிக பேச்சுவார்த்தை வைத்துக் கொள்ள மாட்டார்கள். தங்கள் மனைவி மகளுடன் கூட வெளியே பேசமாட்டார். மற்றவர் ஐயப்பட இடம் கொடுக்கக் கூடாது என்ற என்னணம், அதனால் தான் சீடர்கள் ஆச்சரியபட்டார்கள்.

சமாரியப் பெண் தன் ஊருக்குத் திரும்பி அவர்கள் முன் முதல் சாட்சியாக விளங்கினாள். யோவான் 4:39-42. இந்த வசனத்தில் இயேசு அந்தப் பெண்ணுடன் அன்று உரையாடின காரணத்தால் அனேக மக்கள் இயேசுவை அறிந்தனர்.

## இரட்டை நிலைப்பாடு யோவான் 8: 3-11

"அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டு வந்து ; போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களை கல்லெறிந்து கொள்ள வேண்டும் என்று மோசே நியாயப் பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகீறிர் என்றார்கள். அவர்மேல் குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ, குனிந்து விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கையில் அவர் நிமிர்ந்து பார்த்து; உங்களில் பாவமில்லாதவன் அவள் மேல் முதலாவது கல்லெறியக் கடவன் என்று சொல்லி அவர் மறுபடியும் குனிந்து தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கண்டு, தங்கள் மனசாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய் விட்டார்கள். இயேசு தனித்திருந்தார் அந்த ஸ்திரீ நடுவே நின்றால். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறு ஒருவரையும் காணாமல்; ஸ்திரீயே, உன் மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக்கத் தீர்கிறதில்லை ; நீயோ, இனிபாவஞ் செய்யாதே என்றார்".

5. இயேசு தரையில் என்ன எழுதியிருப்பார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

புதிய ஏற்பாடு அறிஞர் எஸ். ஸ்காட்கி தனது ஊகத்தில் “அந்த ஆண் எங்கே?” என்று எழுதியிருப்பார். ஏனெனில் இந்தப் பாவஞ் செய்ய ஆண் பெண் இருவர் சம்பந்தப்படுவார்கள்.

6. உங்களில் பாவமில்லாதவன் அவள் மேல் முதலில் கல்லெறியக்கடவன்” என்று அவர்களிடம் கூறினார். இந்தப் பதில் அவர்கள் காலகாலமாக கொண்டிருந்த எண்ணத்தை எவ்வாறு மாற்றியது? (பெண்ணுக்கு விபசாரம் செய்வது குற்றம். ஆனால் ஆணுக்கு தன் மனைவி தவிர வேறு ஒரு பெண்ணுறவு இருந்தால் குற்றமாகாதோ?)

## <u>இருதயத்தில் இச்சை</u> மத்தேயு 5:27-28

“விபச்சாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீகள். நான் உங்களுக்கு சொல்லுகிறேன் ; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோட விபச்சாரஞ் செய்தாயிற்று”.

7. மனிதர் எதைச் செய்யக் கூடாது என்று கூறுகிறார்? ஒரு மனிதன் இச்சை கொள்ளுகிற நிலையில், இயேசு யாரைக் குற்றப்படுதுகிறார்? ஆணையா? பெண்ணையா?

8. ஆண்கள் பெண்கள் மேல் இம்சிக்காமல் இருந்தால் பெண்களின் நிலை என்னவாக இருக்கும்?

மேற்குறிய சம்பவங்களின் மூலம், இயேசு தாம் பெண்கள் மத்தியில் ஊழியம் செய்ய தடை உணர்வு ஏற்பட்டிருந்தால் பெண்கள் யாவரும் விடுதலை பெறவும் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கவும் தடையேற்பட்டிருக்கும் இந்த அச்சத்தை முற்றிலுமாக இயேசு தூக்கி எரிந்து விடுகிறார். ஆண்களிடம் பெண்ணை ஒரு போகப் பொருளாகக் கொள்வது ஒரு பெரிய பாவம் என்று இயேசு சுட்டிக்காட்டுகிறார்.

## <u>கருத்துகளின் தொகுப்பு</u>

விழுந்துபோன இவ்வுலகில் பெண்கள் குழந்தைகள் பேறுக்காகவும், உழைக்கவும் ஆண்களின் ஆசைகளை திருப்தி செய்யவுமாக கருதப்படுகிறார்கள். ஆனால் இயேசு இதைவிட உயர்ந்த இலட்சியங்களுக்குரியவர் பெண்கள் என்பதி தெளிவாக்குகிறார். பெண்,

கடவுளிடம் கொண்டுள்ள உறவுதான் மேன்மையானது புதுமைப் பெண், விடுதலை பெற்றவளாக ஆண்களுடன் சரி நிகர் சமானமாக இருக்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார்.

## <u>பயன்பாடு</u>

பள்ளி, திருச்சபை, குடும்பம் ஆகிய இடங்களின் ஆண்கள் பெண்களும் பாலுறவு சிந்தனையின்றி ஒன்றாகப் பணியாற்ற என்ன செய்ய முடியும்?

## பாடம் 10 குடும்பத்தில் தலைமைத்துவம் - பவுல் அடியார்

____ எபேசியருக்கு எழுதின நிருபத்தில் பவுலடியார் இயேசுவானவர் கற்பித்த போதனைகளை கூடுதல் விளக்கம் கொடுத்து, விழுந்துபோன உலகில் எவ்வாறு மீட்புப் பெற்று வாழ்வது என்று கூறுகிறார். ஆனால் பவுல் ஆணாதிக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக குறை கூறப்பட்டார். அவரை சரிவர புரிந்து கொள்ளாத காரணத்தால் இப்படிப்பட்ட எண்ணம் உண்டாகிறது. எபேசியர் 5 மற்றும் 6 அதிகாரங்களை ஊன்றி வாசித்தால் அவர் ஆணாதிக்கத்தை தள்ளிவிட்டு இயேசு காட்டின வழியையே பின்பற்றுவதைக் காணமுடியும்.

கலாசாரத்தின் விளைவாக ஒரு மக்கள் மற்றொரு மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது என்பது ஏற்படுகிறது. ஒருவர் ஏழையாக இருந்து மற்றமக்கள் மேல் ஆதிக்கம் செய்ய முடியாவிட்டாலும், தன் குடும்பத்திற்குள்ளே இந்த ஆதிக்க உணர்வை காட்டுவது ஒரு கலாச்சாரத்தின் பாதிப்பே.

இயேசு, நாம் மற்ற மக்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதோ, கட்டுபடுத்த முயற்சிப்பதோ, தவறு என்று போதித்தார். இந்தப்பாடத்தில் இயேசுவின் போதனைகளை ஒட்டியே பொதுவான அதிகார எல்லை குடும்பத்திற்குள் செலுத்துவதற்கு எதிராகப் போதிபதைக் காணமுடிகிறது. முதலாவது அதிகாரம் பெற்றதும் நிரந்தரமான “அடிமைத்தனம்” என்ற முறையைப் பற்றி படிப்போம்.

### பவுலும் அடிமைத்தனமும்

பவுல் தனது நிருபங்களை ரோமக் குடியிருப்பில் உள்ளவர்களுக்கு எழுதுகிறார். அவர் காலத்தில் ரோமர்கள் ஐரோப்பா முழுமையும் மத்திய கிழக்கு நாடுகளையும் ஆட்சி செய்தனர். ரோம் சமுதாயம் எனபது வல்லமை நிறைந்த சில தலைவர்கள் மற்றபெரும்பான்மை மக்களை தங்கள் ஆளுகைக்களுள் வைத்து நடத்திச் சென்ற ஓர் பேரமைப்பாகும். ரோமர் குடும்பம் என்பது தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் அவர்களின் அடிமைகளையும் சேர்த்ததாகும். அடிமைகள் தங்கள் எஜமான்களின் வீட்டிலேயே வாழ்ந்தனர். கீரிஸ். இத்தாலி மற்றும் கொரிந்து போன்ற பட்டணங்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு அல்லது பாதிப்பேர்கள் அடிமை வகையினரே. ஒரு பகுதியினர் அடிமைகளாக வாழ்ந்து பின் சுதந்திரம் பெற்று அவர்களுடன் குடிமக்களாக இருந்தனர். குடும்பத்தில் அடங்கியிருங்கள் என்று பவுல் கூறுவதைப் புரிந்து கொள்ளுமுன் அடிமைகள் எவ்வாறு

நடத்தப்பட வேண்டும் என்று கூறுவதைக் கவனிப்போம். அடுத்து பவுல் மனைவிகளுக்கும் பிள்ளைகளுக்கும் கூறுவதைக் கேற்றுக் கொள்வோம். பின்பு, எஜமான்களுக்கும், தகப்பன்மார்களும், புருசர்களுக்கும் கூறும் அற்புதமான காரியங்களையும் பார்ப்போம்.

## அடிமைகளுக்கு அறிவுரை எபேசியர் 6: 5-8

> "வேலைகாரரே உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடு கீழ்ப்படிந்து மனுஷருக்குப் பிரியமாயிருக்கிறவர்களை பார்வைக்கு ஊழியம் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும் சுயாதீனமுள்ளவனானாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான் என்று அறிந்து மனுசருக்கென்று ஊழியஞ்செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதுடன் ஊழியஞ் செய்யுங்கள்.

1. எபேசியர். 6: 5-8 வசனங்களில் அடிமைகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று பவுல் கூறுகிறார்?

இந்தப்பகுதியில் அடிமைகள் என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் வினைச் சொற்களை வரிசைபடுத்து. பின்னர் கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் அதை எழுதலாம். அடிமையானவன் யாருக்குக் கீழ்படிய வேண்டும்? "பயதோடும் நடுக்கத்தோடும்", "கபடற்ற மனதோடும் யாருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும்? இந்தப் பட்டிகளில் எழுதலாம்.

| | | |
|---|---|---|
| அடிமைகள் | பிள்ளைகள் | மனைவிகள் |
| எஜமான்கள் | தகப்பன்மார்கள் | கணவன்மார்கள் |

<u>பிள்ளைகளுக்கு ஆலோசனை</u> எபெசியா 6: 1 - 3

“பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருள் கீழ்படியுங்கள் இதுநியாயம். உனக்கு நன்மையுண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத் தத்தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது?

2. பிள்ளைகள் என்ன செய்ய வேண்டும் என்று பவுல் எடுத்துக் கூறுகிறார்? மேற்கண்ட பெட்டியில் பிள்ளைகள் என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பிடும் வினைச் சொற்களை உரிய இடத்தில எழுதுக. பிள்ளைகள் எவற்றை செய்ய வேண்டும்?

<u>மனைவிகளுக்கு ஆலோசனை எபேசியர் 5:21 - 24, 33</u>

“மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருகிறது போல

புருசனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரதிற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருசனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். எப்படியும் உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூறுவது போல தன் மனைவியினிடனத்திலும் அன்பு கூறக்கடவன்; மனைவியும் புருசனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்".

3. மனைவிகள் என்ன செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார்?

"மனைவிகள்" செயல்களைக் குறிப்பிடும் வினைச் சொற்களை மேலே கொடுத்த பெட்டியில் வரிசைப்படுத்து.

4. மனைவிகள் செய்ய வேண்டியவற்றிற்கும் பிள்ளைகள் அடிமைகள் செய்ய வேண்டி காரியங்களுக்கும் காணப்படும் வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

21, 22 வசனங்களுக்கிடையே ஒரு தனி பத்தியாக சில மொழி பெயர்ப்புகள் குறிப்பிட்டாலும் அந்த இரண்டு வசனங்களும் ஒரே வசனத்தின் இரு பகுதி தான். 22ம் வசனத்தின் ஒரு வினைச் சொல்லே இல்லை. அது 21ஆம் வசனத்தின் ஒரு பாகமே. மனைவிமார்கள் மட்டும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பவுல் கூறவில்லை. எல்லாக் கிறிஸ்தவர்களும், ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

மனைவி "கீழ்ப்படிந்திருப்பதைக் காட்டிலும் அடங்கிப் போதல்" அவசியம். உங்கள் மொழியிலும் ஆங்கில மொழியிலும் இந்த இரு சொற்களுக்கும் வித்தியாசம் உண்டு. பவுல் இந்தக் கடிதத்தை கிரேக்க மொழியில் எழுதுகிறார். இந்த மொழியில் "அடங்கியிருத்தல்" என்பது "கீழ்ப்படிதல்" அல்லது "ஒத்துப்போதல்" என்று பொருளில் வராது. உலகில் காணப்படும் அதிகார வேட்டையில் இருந்து விலகி, கிறிஸ்தவர்கள் இயேசுக் கிறிஸ்துவை பயனுள்ள முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

5. மனைவிமார்கள் ஏன் இவற்றைச் செய்ய வேண்டும்?

அடிமைகள். பிள்ளைகை மற்றும் மனைவிகளுக்கு வெகுசில உரிமைகளே உள்ளன. ரோம சட்டத்தின்படி எஜமான்களும், தகப்பன்மார்களும், புருசர்களுக்கும் கீழ்படிவது அவசியம். உண்மையில் பார்த்தால், ஒரு ரோமன் தனது அடிமையையோ, பிள்ளையையோ கொன்று விடக் கூட உரிமையுண்டு. அடிமைகள், மனைவிகள், வளர்ந்த பிள்ளைகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பொய்யாகப் புகழ்தல் (ஆண்களுக்கு பிரியப்படுத்தும் வகையில் உள்ளத்திலிருந்து வராத) செயல்களைச் செய்வார்கள்.

கிறிஸ்தவர்கள் பயத்தினாலோ, கடிமைக்காகவோ அல்லது சுயநலத்துக்காகவோ நடந்து கொள்ளக்கூடாது. அனால் கர்த்தருக்கென்றே அவர்கள் தங்கள் சேவைகளைச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர்கள் செய்வதனால் மனிதருக்கல்ல கர்த்தருக்குச் சேவை செய்கிறார்கள். மேலும் கிறிஸ்துவுக்கு தமது கனத்தை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

## <u>எஜமானர்களுக்கு ஆலோசனை</u> எபேசியர் 6 : 9

“எஜமான்களே அப்படியே நீங்களும் வேலைக்காரருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானவர் பரலோகத்தில் இருக்கிறார் என்றும் அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள்”.

6. எஜமான்கள், அடிமைகள் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறானோ அவைகளை அடிமைகளுக்குச் செய்யுங்கள் என்று பவுல் கூறுகிறார். இவைகள் எல்லாம் என்னென்ன? எஜமான்கள் வேறு என்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்கிறார்? அந்தக் காரியங்களை குறிப்பாக மேல கொடுக்கப்பட்ட அட்டவணையில் தொகுத்தெழுதுக.

7. “அவரிடத்தில் பட்சபாதமில்லை” என்பதன் உட்பொருள் என்ன?

## <u>பிதாக்களுக்கு ஆலோசனை</u> எபேசியர் 6 ; 4

“பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த் தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும்” அவர்களை வளர்ப்பீர்களாக”.

8. எபேசியர் 6: 1 - 3 வசனங்களில் தங்கள் தகப்பனையும், தாயையும் மதிக்க வேண்டும் என்றும் கீழ்ப்படிய வேண்டும் என்றும் பவுல் கூறுகிறார். வசனம் 4இல், பிதாக்களுக்கு மட்டும் ஆலோசனை கூறுகிறார். விழுந்து போன மனுக்குலத்தில், பிள்ளையின் கடமை தன் பெற்றோருக்கு மதிப்பையும் மகிமையும் கொண்டு வரவேண்டும் என்பதே. ரோம ராஜ்யத்தில் பெற்றோருக்குக் கீழ்படிதல் அவர்களுடைய நாட்டுச் சட்டத்திலேயே இருக்கிறது. கீழ்படியாத மகன் கொல்லப்படத் தடையில்லை. நேர்மாறாக ஒரு கிறிஸ்தவ தகப்பன் தந்து மக்களை எதற்காகவும் கீழ்ப்படிதலிலும் மதிக்கச் சொல்வதிலும் நடத்த வேண்டும் என்று இந்த வசனம் கூறுகிறது. முன்போலவே பிதாக்கள் செய்ய வேண்டிய காரியங்கள் அடக்கிய செயல்களின் வினைச் சொற்கள் மேற்கொடுத்த பெட்டியில் தொகுத்து எழுது.

## <u>கணவன்மார்களுக்கு ஆலோசனை</u> எபேசியர் 5: 25 -33

“புருசர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள், அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குவதர்க்கும், கரைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையான சபையாக அதைத் தமக்கமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அப்படியே, புருசர்களும் தங்கள் மனைவிகளை தங்கள் சொந்தச் சரீரங்களாப் பாவித்து அவர்களில் அன்பு கூற வேண்டும். தன் மனைவியில் அன்பு கூறுகிறவன் தன்னில்தானே அன்பு கூறுகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே கர்த்தர் சபையைப் போசித்துக் காப்பாற்றுகிறார். நாம் அவர் சரீரத்தின் அவயங்களாயும் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து, ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது ; நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூறுவது போல தன் மனைவியிடத்தில் அன்பு கூறக்கடவன். மனைவியும் புருசனிடத்தில் பயபக்தியாயிருக்கக் கடவள்”.

ஒரு ரோமக் குடிமகனுக்கு தன்னுடைய அடிமையையும் பிள்ளைகளையும், மனைவியையும் கட்டுப்படுத்தவும் பயமுறுத்தவும் வற்புறுத்தவும் செய்து நடத்த வேண்டிய கடமையும் உரிமையும் உண்டு. அங்கு திருமணம் என்பது பெற்றோர்கள் ஒழுங்கு செய்வார்கள். இதன் மூலம் அவர்களது நிலையைய் வலுப்படுத்துவார்களே அல்லாமல் மணமகன் மணமகள் ஆகியோரின் விருப்பு வெறுப்புகளைக் கருதப்பட்டார்கள். சராசரியாக 12 வயதுள்ள பெண் சுமார் 20 வயது அல்லது 30 வயதுள்ள ஆணுக்கு மணம் செய்து கொடுக்கப்படுவாள். பவுலின் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு காதல் அல்லது ஒன்றித்த கணவன் மனைவி என்ற தற்காலக் கருத்துகள் தெரியாது. ரோம் மனைவிகள் தங்கள் கணவனுக்கு உரிய வாரிசுகளை (ஆண் வாரிசுகளை) கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டார்கள், அதன்படி குடும்பம் நடத்த வேண்டும்.

ஆண்கள் தங்கள் முயற்சிகளினாலே மேலே உயருவதற்க்கும் குடும்ப மேன்மைகாக செயல்பட வேண்டும். வேறு குடும்பத்திலிருந்து பெண் வருவதால் அவளை சந்தேகத்துடன் தான் நடத்துவார்கள். உண்மையில் ஒரு

மனைவி தன்னைப் பெற்ற தகப்பனுக்குத் தன் முதல் மரியாதையையும் கணவனுக்கு அடுத்த நிலையம் தருவாள். அவள் ஒரு மகனைப் பெற்று குடும்பத்துக்கு வழங்கிய பின்னரே அவள் நம்பத்தகுந்தவளாக ஆகிறாள். திருமணம் உணர்வு பூர்வமாக ஒன்றித்து இருப்பதல்ல. ஒரு கணவனுக்கோ மனைவிக்கோ ஏதேனும் பிரச்சனை எழுந்தால் தன்னுடைய சகோதரனிடம் ஆலோசனை கேட்பாள். தன் கணவநிடதிலோ, மனைவியிடத்திலோ அல்ல.

9. மனைவிகளை எவ்வாறு நடத்த வேண்டும் என்று பவுல் கூறுகிறார்? மேல கொடுக்கப்பட்ட பெட்டியில் கணவனின் செயல்களைக் கூறும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்களை தொகுத்து எழுதுக.

10. மேலே கொடுக்கப்பட்ட பெட்டியில் எஜமான் புருஷன் மனைவி பிள்ளைகள் பெற்றோர் இவர்களின் செயல்கலித் தொகுத்துச் செய்தவற்றில் இருந்து, பவுல் ஆணாதிக்கத்திற்கு ஆதராவாகக் கூறுகிறாரோ அல்லது எதிர்த்துக் கூறுகிறாரா? கணவன் தன் பிள்ளைகளையும் வளர்ப்பது நேசிப்பது மற்றவர்களுக்காகத் தன்னையே கொடுப்பது. தமக்கு உலகியல் முறையில் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மனைவி பிள்ளைகளின்மேல் உபயோகிக்க மறுப்பது இவைகள் எல்லாம் நாட்டின் நடைமுறைக்கு எதிரானது.

அடிமைகள், பிள்ளைகள் மனைவிமார்கள் ஆகிய இவர்கள் மேல் பெரிய மனிதர்களுக்கு நாட்டின் நடைமுறைப்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பவுல் அங்கிகரிகிறார் ; அது மறுக்க முடியாததும், தவிர்க்க முடியாததுமாகும். ரோம் நாட்டுச் சட்டப்படி மேற்கூறியவர்கள் ஆணுக்குத் கட்டுப்பட்டவர்கள் என்று கிறிஸ்து ஆண்களுக்கு கூறி இவைகளைத் தங்கள் சொந்தக் காரியங்களுக்காக பயன்படுத்தலாம் என்று பவுல் கூறாமல் தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை நாட்டின் முறைமையின்படி பயன்படுத்தாமல் அவர்கள் எதைச் செய்தாலும் கிறிஸ்துவின் மாதிரியிலேயே செய்ய வேண்டும் என்று பவுல் கூறுகிறார். இயேசு வந்த பின்பு மேலாண்மை என்பதைத் தெளிவாகக் கூறவேண்டுமென்றால், இயேசு இதை எப்படிச் செய்தாரோ அப்படியே செய்வது தான் மேலாண்மை இயேசுவே எல்லாவற்றிற்கும் வியாபிக்கிறார். அதற்குள் வேறெவரும் பிரவேசிக்க முடியாது. இவற்றிற்கு பிறகு இயேசு காட்டிய வேலைக்காரன் என்ற நிலைக்கு வருதல் காரியங்களைச் செய்வதாகும். இயேசு ஆண் பெண் அடிமை பிள்ளைகள் எல்லோரையும் தமது நிலைக்கு வரும்படி செய்கிறார் (பார்ட்கி 1997) கிறிஸ்தவ ஒப்படைப்பு என்பது, தமக்குள்ள அதிகாரம், செயல்திறனை கீழ்ப்படுத்திக் கொள்வது. ஒரு வேளை சமுதாயம் உன்னை ஓர் தலைவனாக உயர்த்தினால், அந்நிலையில் கிறிஸ்துவின் (பவுலின் போதனைகளின் படியும்)

மக்கள் தங்கள் வேலைக்காரனாக ஆகியபின் அதற்கேற்ப அடிமையைப்போல செயல்படுவது.

| அடிமைகள் | பிள்ளைகள் | மனைவிகள் |
|---|---|---|
| எஜமான்களுக்கு கீழ்ப்படிதல் பார்வைக்கு ஊழியம் செய்தல், அடிமையானாலும், தம்மால் முடிந்த அளவு கடவுளுக்கு ஊழியம் செய்தல் | தாய் தகப்பனுக்குக் கீழ்படிந்து கனப்படுத்துதல் | கணவன்மார்களுக்கு கீழ்படிதல் கணவனை மரியாதையுடன் நடத்துதல் |
| **எஜமான்கள்** அடிமை தனக்குச் செய்தது போலத் தானும் செய்தல் பயமுறுத்தாமல் நடத்துதல் (மிரட்டாமல்), ஒரு மனிதனுக்கு உலகில் உள்ளபடியான ஆளும் அதிகாரத்தை கடவுள் ஏற்றுக்கொள்வதில்லை | **தகப்பன்மார்கள்** தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் நடத்துதல், கர்த்தருடைய வழியில் போதித்து நடத்துதல் | **கணவன்மார்கள்** தம் சரீரம் போல அன்பு செலுத்துதல் மனைவிக்காக தன்னைத் தியாகம்செய்தல், அவளை மகிமையுள்ளவளாக்குதல் போதித்தல் கவனித்தல் மனைவிக்காக தகப்பனையும் தாயையும் விட்டுப்பிரிதல் |

## செயல்படுத்துதல்

11. கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒரு கணவன் மனைவியை எவ்வகையிலும் ஊக்கப்படுத்த வேண்டும் என்று ஏன் நீ எண்ணுகிறாய்? (வசனம் 33)

12. பவுலில் அறிவுரைகளின்படி பிதாகள் தங்கள் பிள்ளைகளை எவ்வாறு நடத்த வேண்டும்? திருமணமான கணவன் மனைவி ஒருவருக்கொருவர் எவ்வாறு ஒருவரை நடத்த வேண்டும்?

## பாடம் 11 தலைமைத்துவமும், பவுல் அப்போஸ்தலனும்

"புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் எபேசியர் 5: 20 - 23

ஆண், பெண் ஆகிய இவர்களை மீண்டும் ஆதியில் இருந்த உன்னத நிலைக்குக் கொண்டு வருவதுதான் பவுல் அப்போஸ்தலனின் போதனையின் நோக்கம். அந்த இலட்சிய நிலையை புரிந்து கொள்ளும்முன் விழுந்து போனதும் உலகில் நிலவுவதுமான நிலையைத் தாண்டிச் செல்ல வேண்டும். அவர் "தலை" (அதாவது மனைவிக்கு என்று சொல்லும் அந்தச் சொல்லுக்கு சரியாக விளங்கிக் கொள்வது மிக அவசியம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து தெய்வ பயத்தோட ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருகிறது போல, புருசனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருகிறார்.

1. 'தலைமை' என்ற சொல்லைப் பொதுவாக எவ்வாறு புரிந்து கொள்ளுகிறார்கள் (இந்தப்பகுதியுடன் சேர்த்து?)

2. கணவன் மனைவி உறவை காலாகாலமாக இந்த வசனங்களைப் பொருத்து எவ்வாறு புரிந்து கொள்ளுகிறார்கள்.

சில மொழிகளில் 'தலைமை' என்ற சொல் "தலைவன்" "அதிபதி" "மேலாதிக்கம்" என்று பொருள் தருகிறது. பவுல் இங்கே "தலைமை" என்று கூறும்போது மேற்குறிப்பிட்ட எந்த பொருளும் அதற்கு வராது.

அதற்கு இவ்விடத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தை(Kephale) உச்சியில் வைக்கப்பட்டுள்ள ஒரு பொருளைக் குறிப்பிடுகிறது. (ஒரு வரிசையில் மேல் இடம்) சாதாரணமாக "சரீரத்தின் தலை" என்ற அர்த்தம் ஒரு ஆற்றின் "துவக்கம்" என்ற பொருளில் இது வராது. மேலும் இச்சொல்லுக்கு ராணுவ வரிசையில் முதல் அணியில் நிற்கும் வீரன் என்று பொருள். அதிகாரியான தலைவனையல்ல, ஒரு சாதாரண வீரன் ஆபத்தை எதிர்நோக்கி நிற்பவன் என்பது. பவுல் இந்தக் கடிதத்தை எழுதும் போது Kephale என்ற வார்த்தைக்கு தலைவன், அதிபதி, மேலாதிக்கம் என்ற பொருள் இல்லை.

புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் தலைமை என்ற இச்சொல்லுக்கு Arehe என்ற சொல்லைத்தான் பயன்படுத்தினார்கள். 'அதிகாரம்' என்ற பொருள்பட வேண்டும் என்றால் அதற்கு Exousia என்ற வார்த்தையைத் தான்

பயன்படுத்திருக்க வேண்டும் மேலும் Kyrias இதற்கு ஆண்டவன் அல்லது Dispotis ஒரு வீட்டுக்குத்தலைவன் என்ற வேறு சொற்களைப் பயன்படுத்திருக்க வேண்டும்.

கணவன் உறவை (எபேசியர் 5 அலல்து ( I கொரிந்தியர் 11 ) பவுல் குறிப்பிடும் போது குறிப்பிட்ட சொற்களைப் பயன்படுத்தவில்லை. மேலும் இதனை ஆய்வு செய்தால், கணவன் குடும்பத்தின் தலைவனாக இருப்பது மிக அருமையானதே எனினும் பவுல் இந்த வார்த்தையில் கணவன் மனைவி மேல் எவ்வகையான ஆளுகையும் செய்ய வேண்டும் என்று கூறவில்லை.

“கிறிஸ்து சபைக்கு தலையை இருக்கிறது போல...” ஆண், பெண்ணுக்குத் தலையைத் தலையாய் இருக்கிறான் என்று 2 முறைதான் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்து சபைக்கு தலையாய் இருக்கிறார் என்று பலமுறை கூறப்பட்டுள்ளது. கிறிஸ்து சபைக்குத் தலையாயிருகிறார் என்பதை புரிந்து கொள்ளும்போது நாம், பவுலடியார் திருமணத்தில் கணவன் மனைவி உறவு என்ற பொருளில் “தலையாக” என்று கூறுவதை மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் எபேசியர். 1: 9 - 10 வசனங்கள் பவுல் கூறியதை அதற்கு தொடர்பான வேறொரு கருத்தைக் கூறி விளக்குகிறார்.

## <u>எபேசியர் 1 : 9 - 10</u>

“காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்தில் இருக்கிறவைகளும், பூலோகத்தில் இருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கட்டப்பட வேண்டுமென்று. தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தப்படி எங்களுக்கு அறிவித்தார்”. “ஒன்றுப்படுத்து” என்ற கிரேக்க மொழியில் உள்ள சொல்லுக்கு “தலைதூக்கு” என்பது பொருள். மொழியாக்கம் செய்யப்படும்பொழுது “திரட்டிக்கூறு” “ஒன்றுபடுத்து” பல காரியங்களை “ஒன்றாகச் சேர்” என்ற பல பொருள்களில் வருகிறது. இங்கு தலைமை என்ற சொல்லுக்கு “பல காரியங்களை ஒன்றாகச் சேர்” என்று பொருள் என்று நாம் வைத்துக் கொண்டு கிறிஸ்து சபைக்கு தலை என்ற பொருளைத் தியானிப்போம்.

## கொலோசியர் 1 : 17 - 18

“அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர் எல்லாம் அவருக்குள் நிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவள்.

## கொலோசியர் 4 : 15

“அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுகுள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். “ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும் சகல துறைத்தனகளுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராய்யிருக்கிற அவருக்குள் பரிபூரணமுள்ளவராயிருக்கீறீர்கள்”.

## எபேசியர் 1: 22 -23

எல்லாவற்றையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்”.

3. இந்த வசனங்களில் “தலைமை” என்ற சொல்லுக்கு என்ன பொருள் காணப்படுகிறது.

எபேசியர் 1; 22 வசனம் முக்கியமாக நமது ஆய்வுக்கு “தலைமை” என்ற சொல் ஆளுகிறவர் என்ற பொருள் கொடுப்பதற்கும், ‘தலைமை’ என்பது “ஒன்றாகுகிறவர்” மற்றும் வளரச் செய்கிறவர் என்ற பொருள் கொடுப் பதற்க்கும் உள்ள வேறுபாடுகளை அறிய உதவி செய்கிறது. இந்த வசனத்தில் கிறிஸ்து சபையுடனே ஒன்றாயிருகிறார் ; சபையே அவரது சரீரம் மற்றும் அவருடைய பூரணத்துவம். கீழ்ப்படுத்தப்படுகிறவைகளில், எல்லாம் அவர் பாதத்தின் கீழ் இருக்கும் அவரது தலையின் கீழாக அல்ல. இவ்விதமாக தலை என்பது கீழ்ப்படுத்தாமலும் ஆளுகை செய்யாமலும் இருந்து ஆனால் சரீரத் துடன் இணைந்து ஆட்சி செய்கிறதாயிருக்கும்.

கெர்வின் என்ற கிரேக்க அறிஞர் எழுதும்போது “பவுல் தனது கடிதத்தில் ‘தலைமை” என்று குறிப்பிட்டு எழுதும்போது எவற்றையெல்லாம் மனதில் கொள்ளுகிறார்? பழமைவாதிகள் கூறுவதுபோல ‘மேலதிகாரம்’ என்றோ “முதன்மைநிலை” என்றும் கொள்ளாமல், பவுலடியார் இங்கே - தலை - சரீரம் - என்ற உதாரணத்தை மிகச் சாதாரணமாகவே பயன்படுத்துகிறார்.

## தலை + சரீரம் = ஒரே மாம்சம் எபேசியர் 5: 20 - 31

“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எல்லாவற்றிற்காவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ

பயத்தோட ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருசருக்குக் கீழ்ப்படியுங்கள் கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருசனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் ; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருகிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருசர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள் அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, நாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து , பரிசுத்தமாக்குகிறதற்கும், கரைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல், பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். அப்படியே புருஷர்களும் மனைவிகளைத்தங்கள் சொந்த சரீரமாகப் பாவித்து அவர்களில் அன்பு கூற வேண்டும். தன் மனைவிகளில் அன்பு கூறுகிறவன் தன்னில் தான் அன்பு கூறுகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே. கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறது போல, ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்து காப்பாற்றுகிறான். நாம் அவருடைய அவயங்களாயும் அவருடைய மாம்சத்திற்கு அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்".

4. "தலைமை" என்ற சொல்லை "ஒற்றுமையை உண்டாக்குகிறவர்" (இரண்டு நபர்களிடையே) என்று, (ஆளுகை செய்கிறவர் என்றில்லாமல்) மொழிபெயர்த்தல், பவுல் புருசன்மார்களுக்கு எபேசியர் 5: 25 - 31 வசனங்களில் கூறியவற்றை புரிந்துக் கொள்ள எந்த அளவுக்கு உதவியாக இருந்தது?

5. கிறிஸ்து சபையின் தலையாய் இருந்து செயல்பட்டது போல (முன் குறிபிட்டது) புருஷன்மார்கள் எவ்வாறு செயல்படவேண்டும்?

6. ஒன்றாயிருப்பதற்கும், வளர்ச்சி பெர்வதர்க்கும் கணவன் முயற்சி செய்து நடந்து கொள்ளும்போது, திருமண உறவில் என்ன நன்மையால் ஏற்படும்?

"தலையாய்" இருப்பது என்பது ஒரு சிலாக்கியமாக அல்ல ஒரு தியாகமாக, அதாவது மனைவியின் தேவைகளை தன் தேவைகளுக்கு சமமாக வைத்துக் கொள்வதுஆகும். கிறிஸ்து சபைக்கு தன்னையே கொடுத்தது போல, பவுல் ஆண்களுக்கு கிறிஸ்துவை தமக்கு மாதிரியாக வைத்து நடக்க

வேண்டும் என்று கூறுகிறார். அதுபோல 23 வசனத்தில் இரட்சகர் என்று குறிப்பிடும்போது, இந்த இரட்சகர் மற்றவர்களுக்கு நன்மை செய்கிறவராக பெரும்பாடுகளையும் ஏற்கிறவராக இருக்க வேண்டும் என்கிறார்.

பவுல் மனைவிமார்களுக்கு எழுத்து போது, கணவன்மார்களை "கனப்படுத்த வேண்டும்" என்று கூறுகிறார். இதை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். கணவன் தனக்கு உலகில் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளின்படி தன் மனைவியை ஆளுகிறவராக இல்லாமல், அவளுடன் இசைந்து இணங்கியே போகிறவரானால், என்ன நடக்கும் என்று யோசித்துப் பாருங்கள். ஒரு கிறிஸ்தவனாக கணவன் நடக்க ஆரம்பிக்கும் போது மனைவி அச்சம் கொள்ளும் நிலை ஏற்படுகிறதா? அதைக்கொண்டு தன் கணவன் இப்படி மாறிவிட்டதைக் கண்டு ஏளனம் செய்வாளா? என்று யோசிக்க வேண்டும்.

"கணவன் பாதகமாக …" ஏன் இருக்கக் கூடாது. கணவனும் மனைவியும் சமமாக இணைந்து இருக்க வேண்டும் என்று பவுல் கூறும் போது, கணவனை சரீரமாகவோ பாதமாகவோ இருதயமாகவோ குறிப்பிடாமல் "தலை" என்று ஏன் கூறுகிறார். கெர்வின் என்ற அறிஞர் இதற்கு விளக்கம் கூறும்போது குடும்ப காரியத்தில் முன்னின்று செயல்படுபவன் கணவன் என்று கூறுகிறார். கணவன் முதல் வேலைக்காரன் என்றும் அவர் கூறுகிறார்.

இதே கருத்தை மேலும் தொடர்வோம்; பெண் சேவை செய்ய வேண்டும் என்று எதிர்பார்கிறோம். மனைவியின் தியாகம் கிறிஸ்தவத்தில் பொருளாக அர்த்தப்படாது ஏனெனில் அது அவளது பங்கு. சட்டப்படி மனைவி கீழ்படிந்து நடக்க வேண்டியவளே. எனவே கணவன் மனைவி உறவில் ஒன்றித்த நிலை வேண்டும். எனில், கணவன் முதலில் தனக்குள்ள சிலாக்கியங்களை கீழ்ப்படுத்துகிறவனாக இருக்க வேண்டும். மனைவிக்கு அப்படியல்ல, விட்டுக் கொடுத்து நடக்க அவளுக்கு அதிகாரம் இல்லையே கணவனைப் பொறுத்தவரை, அவன் ஆணாக உருவாக்கப்பட்ட போது பெற்றுக் கொண்டவற்றை அவன் தியாகம் செய்ய வேண்டும். இயேசு திருச்சபைக்காக விட்டுக் கொடுத்து இருக்கிறது போல கணவனும் அதுபோல நடக்க வேண்டும். பவுல் கூறினதுபோல ஒரு கணவன் நடந்து கொண்டால் அது கிறிஸ்துவின் அன்பின் விளைவே அல்லாமல் வேறல்ல.

ஆண் தன் மனைவியை இந்த தியாக உணர்வுடன் திருமண உறவில் தன் சரீரமாக நடந்து கொள்ளும்போது மனைவி தன் பங்காக ஒரு மனைவி அடங்கிப்போகிறவளாக மாறி இருவரும் ஒருவராக ஆகிறார்கள். உறவில் அதிகாரம் செலுத்துதல் என்ற நிலை, முன்வந்தால், ஒருவருக்கொருவர்

இணைந்து போதல் என்ற கிறிஸ்தவ நிலையில் இருந்து மாறிப்போகும். தன்னைத் தாழ்த்தி நடந்து கொள்ளுதல் என்பது வேலைக்காரனின் செயல் போல முக்கியமானது. இப்படிப்பட்ட உறவுதான் ஒருவருக்கு தாழ்ந்து போதல் என்பது அதனுடைய பொருளாகும் (கில்பர்ட் பில் ஜிக்கியன் 159, 161)

## பயன்பாடு

7. பவுல் திருமண உறவில் தலைமை என்று வரும் போது அது எப்படி வாழ்கையை செழிப்பாக்கி, நமக்கு ஓர் சவாலாக அமையும்?

8. கணவன்மார்களே, உங்கள் மனைவியுடன் ஐக்கியப்பட்டு எப்படி நீங்கள் கிறிஸ்துவைப் போல இருப்பீர்கள் மனைவிகளே நீங்கள் உங்கள் கணவன் கிறிஸ்துவைப் பின்பற்றி நடக்கும் போது எவ்வாறு நீங்கள் அவருக்கு கூடுதல் மதிப்புக் கொடுத்து துணையாக இருப்பீர்கள்.

## பாடம் 12 கீழ்ப்படிதல்

மனைவிகள், கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து இருத்தல் வேண்டும் என்று பவுல் கூறும் போது அதிகாரம் என்பது பற்றி கிறிஸ்தவம் என்ன கூறுகிறது. அதாவது மனைவிகள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து இருத்தல் வேண்டும் என்று பவுல் கூறவதை விளங்கிக் கொள்வது என்பது பவுலின் கருத்துகளைக் புரிந்து கொள்வதில் ஒரு பகுதியாகும்.

**கீழ்ப்படித்திருங்கள்** எபேசியர் 5: 21 - 22 மற்றும் கொலேசியர் 3 : 18

"தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே கர்த்தருக்குக் கீழ்படிகிறது போல உங்கள் சொந்தப் புருஷர்களுக்கு கீழ்ப்படியுங்கள். மனைவிகளே கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருசருக்குக் கீழ்ப்படியுங்கள்".

1. இந்த வசனங்களை பொதுவாக எவ்வாறு புரிந்து கொள்ளுகிறார்கள்?

பவுல் "கீழ்படிதல்" என்று சொல்லும் போது அதைப்புரிந்து கொள்வது கடினமாக இருப்பதற்கு காரணம் அந்தச் சொல்லுக்குப் பொதுவாக நல்ல அர்த்தத்தில் அது வருவதில்லை. ஆங்கிலத்தில் கீழ்ப்படிந்து போதல் என்பது, அடங்கிப் போதல் மட்டுப்பட்டு, தாழ்மையுடன் பலவீனமாக எந்த அதிகாரமில்லாமல் சாதரணமாக ஒரு குழந்தையைப் போல, விரக்தி நிலையை எட்டியவர் போல இருத்தல் என்று பொருள் பெரும். பிற மொழிகளிலும் அவ்வாறே இந்தச் சொல்லுக்கு மிகவும் தாழ்ந்து போதல் எந்த ஒரு கேள்வியுமின்றி கீழ்ப்படிதல் என்று தான் பொருள்.

2. உங்கள் கருத்தில் "கீழ்படிதல்" என்பதற்கு என்ன பொருள் கொடுக்கிறீர்கள் ?

ஆங்கில மொழியில் "கீழ்படிதல்" என்ற சொல்லுக்கு நாம் கொடுக்கும் பொருளில் பவுல் கூறவில்லை. புதிய ஏற்பாட்டில் கீழ்ப்படிந்து போக வேண்டும் என்று பலருக்கும் கூறப்படுகிறது.

### கிறிஸ்தவர்கள் தலைவர்களுக்கும் (எபிரெயர் 13 : 17)

உலக அதிகாரத்துக்கும் ( 1 பேதுரு 2 : 13, தீத்து 3 : 1, ரோமர் 13 : 1 ) பிள்ளைகள் பெரியவர்களுக்கும் ( 1 பேதுரு 5 : 5 ) அடிமைகள் எஜமான்களுக்கும் ( 1 பேதுரு 2 : 18 ) கர்த்தருக்கும் யாக்கோபு 4 : 7 ) சபை

கிறிஸ்துவுக்கும் (எபேசியர் 5: 24 ) என்று பல இடகளில் இந்தச் சொல் பயன்படுகிறது.

இதில் எந்த இடத்திலும் “கீழ்படிதல்” என்ற சொல்லுக்கு எந்த இடத்திலும் “அடங்கிப்போதல்” வேறு ஒருவர் கருத்துக்கு பணிந்து போதல், தன் உயர் நிலையில் இருந்து கீழ் நிலைக்கு இறங்கிப்போதல் என்ற கருத்தில் இந்தச் சொல் பயன்படுத்தப்படவில்லை.

## ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்

“மனைவிகளே, உங்கள் புருஷருக்குக் கீல்படிந்திருங்கள் ‘ என்ற வசனம்தானாக தனித்து இருந்து அர்த்தம் கொடுப்பதில்லை. எபேசியர் 5 : 22இல் உள்ள வசனம் முழு வாக்கியம்கூட இல்லை. முடிவான கருத்தும் உள்ளதாக இல்லை. சமீபகால மொழி பெயர்ப்புகள் வசனம் 21 மற்றும் 22 பிரித்துச் சொல்லி வருகிறார்கள் இது சரியல்ல. இந்த இரண்டும் ஒரே முழு வாக்கியத்தின் பகுதிகளாகும். கிரேக்க மொழியில் 22 ஆம் வசனத்தில் “கீழ்படிதல்” என்ற சொல்லிய இல்லை.

## வசனம் 20

பிதாவாகிய தேவனுக்கு எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செலுத்தி வசனம் 21 தெய்வ பயத்தோட ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள் வசனம் 22 மனைவிகளே உங்கள் சொந்த புருசருக்கு கர்த்தருக்குள் இருப்பது போல (சொந்த மொழி பெயர்ப்பு)

பவுல் மனைவிகள் கீழ்ப்படிந்து போக வேண்டும் என்று சொல்வதி மட்டும் தனித்து புரிந்து கொள்ள முடியாது. பொதுவாக கிறிஸ்தவ மக்களில் பலரையும் சேர்த்து மனைவி கணவன், பிள்ளைகள் பெற்றோர்கள் அடிமைகள் எஜமான்கள் எல்லோரும் கர்த்தருக்குள் “ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து” இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் என்று ஏன் கூற வேண்டும்? ஏனெனில் கிறிஸ்துவே அவ்வாறு செய்தார். அன்பினால் தமக்கு உதவி செய்ய தமக்குள்ள அதிகாரத்தைத் தள்ளிவிட்டார். நாம் ஒருவருக்கொருவர் கீழ்படியும் போது கிறிஸ்துவைப் போலவே நடந்து அதனால் அவரைக் கனப்படுத்துகிறோம்.

3. இந்தப்பகுதியை வாசிக்கும உங்களுக்கு கீழ்ப்படிதல் என்பது எப்படி விளங்குகிறது?

பவுல், கீழ்படிதல் என்ற சொல்லுக்கு ஹைப்போடாசோ (Hypotasso) என்ற கிரேக்கச் சொல்லைப் பயன்படுத்துகிறார். டாசோ(Tasso) என்பது ஒரு இடத்தில அமைத்தல் ; ஹைப்போ(Hypo) endraal “கீழாக” வைத்தல்

என்று பவுல் கூறும் போது இந்த வினைச் சொல்லுக்கு மூன்று அர்த்தங்கள் உண்டு. ஒரு சொல் எந்த வினை(Voice) (அதாவது செய்வினை செயல்பாட்டு வினை) என்று கண்டுதான் பொருள் கொள்ள முடியும்.

ஆங்கில மொழியில் இரண்டு வகை வினைகள் மட்டும் உண்டு. செய்வினை, செயப்பாட்டு வினை இந்த அடிப்படையில்தான் தான் நாம் வேத வசனத்தை புரிந்து கொள்ளுகிறோம். ஒருவர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்வது என்பது கீழ்ப்படிதல் ஆகும். அடங்கிபோதல் என்ற செயப்பாட்டு வினைச் சொல்லாகக் கூறினால் வெற்றி கொள்ளப்பட்ட எதிரி அல்லது, ஜெயித்தவன் கீழ் காலில் மதிக்கப்பட்டவன் என்று பொருளாகும்.

பவுல் இந்த செயப்பாட்டு வினையில் இந்தக் கீழ்படிதல் என்ற வார்த்தைப்படுத்தாமல் இரண்டுக்கும் நடுவில் உள்ள வினையாகப் பயன்படுத்துகிறார். இந்த உபயோகம் ஆங்கில மொழியில் இல்லை. நடுவில் உள்ள வினையாக இருப்பதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் முடியாது. ஹிப்போடாசோ என்ற சொல் இரண்டுக்கும் இடையே உள்ள வினையாக வரும்போது நம்மை கீழாக வைத்தல் அல்லது வேறு ஒருவருக்கு நம்மை கீழ்படிய வைத்தல் என்று பொருளாகும்.

ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து போதல் என்று பவுல் சொல்லும் போது, அதன் பொருள், அதிகாரத்துகாக ஒருவருக்கு ஒருவர் சண்டையில்லாமல் இருங்கள். இதற்காகவே பொதுவாக எல்லோரும் குடும்பத்துக்குள்ளேயும் ‘உலகில் உள்ள யாவரும்’ சண்டையிட்டுக் கொள்கிறார்கள். ஆனால் கிறிஸ்தவர் மத்தியில் இப்படியிருக்க வேண்டாம். கிறிஸ்துவின் அவயங்களாக இருக்கிற நாம் ஒருவருக்கு மேலானவரும் ஆல் கீழாக நசுக்கப்பட்டுப் போனவர்களுமல்ல. இயேசுவும் பவுலும் நாம் ஒருவருக்கு ஒருவர் மேலானவர்களைக் கருத வேண்டும் (பிலிப்பியர் 2 : 3) ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருங்கள் (ரோமர் 12 : 10) கனம் பண்ணுகிறதில் ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள். பேதுரு எழுதும்போது “நீங்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்” என்று கூறுகிறார். மற்றவர்களாக மேலாக வைத்துக் கொள்ளுங்கள் என்றாள் நம்மை மற்றவர்களுக்குக் கீழாக (கீழ்படிந்து) வைத்தல் என்று பொருள் தரும். இதை நாம் தெய்வ பயத்தோட செய்கிறோம். இதுவே கிறிஸ்து இயேசு

நமக்குக் காட்டின சரியான மாதிரி. அவர் நமது ஆண்டவர் ; ஆனாலும் நமது கால்களைக் கழுவினார்.

ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள் என்று பவுல் கூறும் போது, கிறிஸ்துவின் உபதேசத்தை நினைவு படுத்தி, உலக அதிகாரத்துகாக போராட வேண்டாம் என்று கூறுகிறார். வேறு ஒன்று "கர்த்தருக்குள்" என்னும் சொல் குழப்பம் உண்டாக்குகிறது. பொதுவாக நாம் வாசிக்கும்போது மனைவிகள் புருசருக்குக் கீழ்ப்படிய வேண்டும். புருசர் கர்த்தருக்குக் கீழ்ப்படிவது போல என்று வாசித்துக் கொள்ளுகிறோம். ஆனால் கொலோசெயர் 3 : 18 இதைத் தெளிவுபடுத்தி "கர்த்தருக்கு ஏற்றபடி" என்று கூறுகிறது. கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி (கணவன்மார்கள் இயேசுவல்ல) மனைவிகள் புருசன்மார்களுக்குக் கீல்படிந்திருங்கள் என்பது.

பொதுவாக சென்ற காலங்களில் எல்லாம், பார்க்கும் போது ஆண்கள், அடங்காத மனைவிமார்களையும், பிள்ளைகளையும் அடக்கி வைத்து நடத்துவது ஓர் கடமையாகக் கருதப்பட்டது. தத்துவ ஞானிகள் ஆண்கள் தங்கள் மனைவிகளை அடக்கியாள வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். சமுதாயம் இதை ஆண்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. புதிய ஏற்பாட்டின்படி நம்மைக் கீழ்ப்படுத்துகிறவர் கடவுள் ஒருவர் மட்டுமே. (எபேசியர் 1 : 22 வேதாகம - புதிய ஏற்பாடு அகராதி)

4. ஸ்சிருஷ்டிப்பின் காலத்தில் "ஏற்ற துணை" என்று கூறப்பட்டதும், மற்ற உடவியானவர்" என்பதும் மனைவி கீழ்படிந்து இருத்தல் என்பதும் எப்படி பொருந்துகிறது.

## பயன்படுத்துதல்

5. கிறிஸ்துவின் முன் மாதிரியைப் போல கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் கீழ்படிந்து போகும் போது, உங்கள் உறவில் ஏதாவது மாறுதல்கள் உண்டாகுமோ? (மற்றவர்களை கீழ்ப்படுத்தி செல்லும் பழக்கம்)

6. பவுல், I கொரிந்தியர் 11 : 7இல் மனைவியானவள் கணவனுக்குக் கிரீடமாயிருக்கிறாள் என்று எழுதுகிறார். எபேசியர் 5: 26 - 27இல் கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களை மகிமையுள்ளவர்களாக்க வேண்டும் என்றாள், கணவனும் மனைவியும் எவ்வாறு நடந்து கொள்ள

**வேண்டும். அந்த நிலையில் மனைவி பயமின்றி, கணவனுக்கு மேலாக இருந்து, அவனை கனம் செய்யாமல் ஆளுகை செய்யாமலிருப்பாள்?**

## பாடம் 13 திருமணம் ஓர் இரகசியம்

"இந்தப்பாடத் தொடர் இயேசு கூறியதான ஆண், பெண் இடையே உள்ள உன்னத இலட்சியம் கண்டுகொள்ள ஆதியில் அவர்களை "ஒருவராகப்" படைத்த நிலையைக் கண்டு கொள்வதன் மூலம் அறியலாம் என்று தொடங்கியது. படைப்பின் வரலாற்றை நாம் பார்த்த போது, ஆதியில் ஆணும் பெண்ணும் படைக்கப்பட்டனர். அவர்கள் நிர்வாணிகளாக இருந்து வெட்கமறி யாதவர்களாக இருந்தனர். இவர்கள் நேர்மை, பயமின்மை ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளல் ஒப்படைப்பு என்ற குணங்களுடன் இருந்தனர்.

பவுல் திருமணம் என்பதை விளக்க திருசபைக்கும் ஆண்டவருக்கும் உள்ள உறவை உதாரணமாகக் கூறினார். இது பெரிய ரகசியம் என்று கூறினார். இருவர் எப்படி ஒருவராக இருக்க முடியும்? ஆதியாகம் 2ஆம் அதிகாரத்தில் உன்னத உறவை வசிக்கிற நாம், எபேசியர் 5ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவ மீட்பில் அந்த உறவு மீளப்பெற்றதைக் காண்கிறோம்.

## ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து நடத்தல் எபேசியர் 5 : 20 - 23

"நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து, தெய்வ பயத்தோட ஒருவருக்கு ஒருவர் கீழ்ப்படிந்திருங்கள். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறது போல, உங்கள் சொந்தப் புருசருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையயாயிருக்கிறது போல புருசனும், மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்துக்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்கு கீல்படிகிரதுபோல, மனைவியும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். புருசர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறதற்கும் கரைத்திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல், பரிசுத்தமும், பிளையற்றுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். அப்படியே புருசர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்பு கூறவேண்டும். தன் மனைவியில் அன்பு கூறுகிறவன் தன்னில் தான்

அன்பு கூறுகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனும் இல்லையே. கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறது போல, ஒவ்வொருவர் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுசன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவிகளுடன் இசைந்து இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த ரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும் அவனனவன் தன்னிடத்தில் அன்பு கூறுவது போல தன் மனைவியிடத்திலும் அன்பு கூறக்கடவன். மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்".

1. வசனங்கள் 20 - 21 யாரைக் குறித்து எழுதப்படுகிறது?
2. வசனங்கள் 25 - 23 மனைவியிடத்தில் கணவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று பவுல் எழுதுகிறார். அன்றாட வாழ்கையில் ஒரு கிறிஸ்தவர் இதை எவ்வாறு நடைமுறைபடுத்த வேண்டும்?

- தன் மனைவிக்காக தன்னையே தர வேண்டும்.
- கரைதிரையற்றவளாக சுத்திகரிக்க வேண்டும்.
- தன்னை நேசிக்கிறது போல தன் மனைவியை நேசிக்க வேண்டும்.
- மனைவியை போஷித்து காப்பாற்ற வேண்டும்.
- தகப்பனையும் தாயையும் விட்டு மனைவியுடன் இசைந்திருக்க வேண்டும்.

வசனங்கள் 22 - 24 மற்றும் 33இல், கிறிஸ்தவ மனைவி தன் கணவனிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. பிரிஸ்டவ் என்ற எழுத்தாளர் எழுதும் மனைவியானவள் தானே முன்வந்து விருப்பதுடன் தயக்கமின்றி நடந்து தன் கணவனுகுக் கீழ்படிய வேண்டும். சுய விருப்பத்தோடு என்று கூறப்படுவதால் இங்கு கீழ்படிதல் என்ற வார்த்தைக்கு "சார்ந்திருத்தல்" தேவைகளுக்கு இசைந்து செல்லல், சாதகமாக நடத்தல் மற்றும் ஆயத்தமாயிருத்தல் என்ற பொருள் உண்டு.

3. அன்றாட நடைமுறையில் மனைவி எவ்வாறு இருக்க வேண்டும்?

- தான் அனுசரணையாக இருக்க வேண்டும்.
- எல்லாவற்றிலும் இந்த குணம் பிரதிபலிக்க வேண்டும்.
- கணவரை மதிக்க வேண்டும்.

4. பவுலின் அறிவுரைப்படி நடந்து கொண்டால் ஒருவேளை மனைவி அதை சரிவரப்புரிந்து கொள்ளாமல் ஏளனம் செய்யக் கூடும். கிறிஸ்து திருச்சபையை பரமாரித்து கொள்வது போல கணவன் மனைவியை கவனித்துக் கொள்ள, மனைவியானவள் எவ்வாறு உதவிகரமாயிருக்க வேண்டும்?

**<u>மத்தேயு 19 : 4 - 6 ஆதியாகமம் 2 : 24 - 25</u>**

_ "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக ஆதியிலே மனுசரை உண்டாகினவர். அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாகினார் என்பதையும் இதினிமித்தம் புருசனாவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால் அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள், ஆகையால் தேவன் இணைத்ததை மனுசன் பிரிக்காதிருக்கக் கடவன் என்றார்".

<u>ஆதி 2 : 24 :</u> "இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

<u>ஆதி 2:25:</u> ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள்.

5. ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்க வேண்டிய உன்னத உறவு என்ன இயேசு கூறுகிறார்? எர்கமவே இது கூறப்பட்டது என்று ஏன் இயேசு கூறுகிறார்.
6. ஆதி 2: 24 - 25 ஆதாமும் ஏவாளும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள். 'நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருக் கிற உறவு எதை நமக்கு கூறுகிறது?
7. இந்த உறவை பவுல் கூறும் காரியங்களோடு இணைத்துக் கூறுக.

   சில ஆய்வாளர்கள் பவுல், பழைய கருத்துக்களையே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறார் என்று சொல்கிறார்கள். அவர் எபேசியர் 5 - 6 அதிகாரங்களில் ரோம அதிகாரிகளுக்கு கிறிஸ்தவர்கள் சிறந்த குடிமக்கள் ரோம ராஜ்யத்தில் நிலவிய சட்டத்தின்படி நடப்பார்கள். இந்த ஆய்வாளர்கள், கிரேக்க ரோம தத்துவ மேதைகள் பவுலின் கருத்துக்களுக்கும், ரோம் நாட்டில் நிலவிய சட்ட திட்டங்களைப்

பின்பற்றியே தன் கருத்தைச் சொல்லுகிறார் என்றாள், முழுவதையும் வாசித்துப் பார்த்தல் முடிவில் அக்கருத்துக்களை முழுவதுமாக மாற்றிப் போடுகிறதைக் காண முடியும். பவுலின் குடும்பம் பற்றிய கருத்துக்களில் ஆண்கள் குடும்ப உறுப்பினர்கள் ஆளுகை செய்ய வேண்டும் என்றில்லாது அவர்களுக்காக தன்னையே ஒப்புக் கொடுத்தல் வேண்டும் என்று கூறுகிறார். மனைவிமார்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று கூறாமல், கணவனோடு ஒன்றித்து சமாதானத்துடன் ஏகமனதுடன் இருக்கவே ஆலோசனை கூறுகிறார்.

எபேசியர் 5 : 21 - 23 பாகத்தில் அதிகாரம் ஆளுகை இவற்றைப் பற்றிச் சொல்லவில்லை. ஆனால் ஒரே மாம்சம் களங்கமற்ற நிலை ஆகியவற்றை மீண்டும் பெருவதற்கான முறைகளையே கூறுகின்றன. இதுவே இயேசுவால் மீது எடுக்கப்பட்டு, பவுலினால் பிரசங்கிக்கப்பட்டது. கிறிஸ்துவின் மூலம் கடவுளின் ஒப்புரவாதல், தனிமை அச்சம் அகற்றி நேர்மையுடன் ஒருவருக்கு ஒருவர் பரஸ்பரம் மதித்து கீழ்ப்படிந்து நடத்தல், அப்பொழுது தான் இருவர் ஒருவராக ஆகும் மாபெரும் இரகசியத்தை அனுபவிக்க முடியும்.

## பயன்பாடு

8. பவுலின் காலத்தில் திருமணங்கள் எல்லாம் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நீயாக மன விருப்பத்துடன் துணையைத் தெரிந்து கொள்ளாத போது எப்படி ஒருமனம் வர முடியும்?
9. தற்காலத்தில் திருமணம் பற்றி நிலவும் சிந்தனைகளுக்குப் பவுலின் போதனை எவ்வாறு சவாலாக அமைகிறது?
10. மற்ற கிறிஸ்தவ மக்களுடன் நீங்கள் மனம் ஒன்றித்து போவதில் எந்த அளவு நெருங்கிப் போயிருக்கீறிர்கள்? அது நடைபெறமுடியும் என்று நம்புகீறிர்களா? இந்த இலட்சியத்திற்கும் உங்களுக்கும் என்ன தடைகள் இருக்கின்றன?

## கலந்துரையாடல்கள் தலைப்புகள்

உங்கள் குழுவில் கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளை கலந்து ஆலோசித்து, அதன் விபரத்தை, வகுப்புக்கு முன் பதிலைக்கூற வேண்டும். கலந்துரையாடலில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

1. இன்றைய தம்பதிகள் என்னென்ன காரியங்களை முக்கியமாக கருதுகிறார்கள்.
2. என்னென்ன பாரம்பரிய நடவடிக்கைகள் கிறிஸ்தவ திருமணங்களில் காணப்படுகிறது.
3. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதன் அவன் தன் மனைவி, பிள்ளைகளை எப்படி நடத்துகிறான்.
4. திருமண எதிர்பார்ப்புகளும், சவால்களும், குடும்ப நலனும் கடந்த நாட்களில் எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது?
5. உங்கள் பாரம்பரியமான கலாச்சாரத்தில் ஆண்கள் மீது சுமத்தப்பட்ட பாரங்கள் என்னென்ன?
6. உங்கள் பாரம்பரியமான கலாச்சாரத்தில் பெண்கள் மீது சுமத்தப்பட்ட பாரங்கள் என்னென்ன?
7. இன்றைய கிறிஸ்தவத் திருமணங்களின் சவால்கள் என்ன?
8. எதிர்பார்ப்புகளும் சவால்களும் கிறிஸ்தவ திருமணங்கள் எவ்வாறு மாற்றியுள்ளது?
9. கிறிஸ்தவத் திருமணங்களை மேற்கத்திய கலாச்சாரம் எவ்வாறு பாதித்துள்ளது?